ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ஒவ்வொரு வினாவுக்கும் **சமமான** புள்ளிகள் உரித்தாகும்.
- உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
- **செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

சுட்டெண் : ........

උත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා පමණි

பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** பின்வரும் கூற்றுக்களுள் எது நிறுவனமொன்றின் நிதிக்கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை **மிகச் சிறப்பாக** விவரிக்கின்றது?
(1) நிறுவனத்தின் கடந்தகாலக் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முகாமைக்கு நிதித்தகவல்களை வழங்குதல்
(2) பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிறுவனத்தின் உள்ளகத் தரப்பினருக்கு நிதித்தகவல்களை வழங்குதல்
(3) முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோருக்கு அவர்களின் வேண்டுதலின்படி பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிறுவனம் பற்றிய நிதித்தகவல்களை வழங்குதல்
(4) நிறுவனத்தின் வெளியகத் தரப்பினருக்குப் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக நிதித்தகவல்களை வழங்குதல்
(5) கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வருமானவரித் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு நிறுவனம் பற்றிய நிதித்தகவல்களை வழங்குதல் (......)

**2.** கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி என்பவற்றுள் குறைவானதில் நிறுவனமொன்றின் இருப்பை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையை விளக்குவதற்குப் பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது **மிகவும்** பொருத்தமானது?
(1) அட்டுறு (2) வரலாற்றுக் கிரயம் (3) இணைத்தல்
(4) முன்னெச்சரிக்கை (5) தேறல் (......)

**3.** நிறுவனமொன்றில் கணக்கீட்டு எண்ணக்கருக்களின் பிரயோகம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை **சரியானது / சரியானவை?**
A - அட்டுறு மற்றும் இணைத்தல் எண்ணக்கருக்களின்படி, முற்பணமாகச் செலுத்தப்பட்ட வாடகையானது அவ்வாடகை ஏற்படும் காலப்பகுதியில் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.
B - முன்னெச்சரிக்கை மற்றும் அட்டுறு எண்ணக்கருக்களின்படி நிறுவனத்தால் செலுத்தப்பட்ட உரிமையாளரின் தனிப்பட்ட மின்சாரக் கட்டணமானது நிறுவனத்தின் புத்தகங்களில் பற்றாகப் பதிவு செய்யப்படுகின்றது.
C - வியாபார அலகு மற்றும் பண அளவீட்டு எண்ணக்கருக்களின்படி, நிறுவனத்தின் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் சூழல் மாசடைதலின் தாக்கமானது அதன் நிதிக் கூற்றுகளில் இனங்காணப்படுவதில்லை.
(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



4. 'மது ரேடர்ஸ்' ஆனது 01.01.2025 இல் ரூ. 15 மில்லியன் காசையும் ரூ. 10 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமொன்றையும் முதலீடு செய்து காணி வியாபாரமொன்றைத் தொடங்கியுள்ளது. மோட்டார் வாகனமானது 5 வருடங்களுக்குப் பெறுமானத்தேய்விடப்படுகிறது. இவ்வியாபாரமானது ரூ. 12 மில்லியன் கிரயமான காணியொன்றை கடனுக்கு மீள் விற்பனைக்காகக் கொள்வனவு செய்துள்ளது. அதில் ரூ. 2 மில்லியன் கிரயமான காணியானது ரூ. 3 மில்லியனிற்குக் கடனிற்கு விற்கப்பட்டது. மேலும் ரூ. 4 மில்லியன் கிரயமான காணியொன்று வியாபாரத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்காக மாற்றப்பட்டுள்ளது.
31.12.2025 இலுள்ளவாறு இக்கொடுக்கல் வாங்கல்களின் தேறிய **விளைவினைப்** பிரதிபலிக்கும் கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | நடைமுறையல்லாச் சொத்துக்கள் (ரூ.மில்) | + | நடைமுறைச் சொத்துக்கள் (ரூ.மில்) | = | பொறுப்புக்கள் (ரூ.மில்) | + | உரிமையாண்மை (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 8 | | 28 | | 12 | | 24 |
| (2) | 12 | | 24 | | 12 | | 24 |
| (3) | 14 | | 24 | | 12 | | 26 |
| (4) | 20 | | 16 | | 12 | | 24 |
| (5) | 21 | | 15 | | 12 | | 24 |

(......)

● **5, 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

சில்லறை வியாபாரமான குமரன் ரேடர்ஸ் ஆனது தனது செயற்பாடுகளை 01.01.2026 இல் ஆரம்பித்துள்ளது. இவ்வியாபாரமானது பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதியப்பட்டுள்ளதுடன், அதன் அனைத்துக் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக் கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பொருட்கள் கொள்வனவு, விற்பனை தொடர்பில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2026 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

1 சமன் ரேடர்ஸ் இடமிருந்து ரூ. 767 000 இற்கு கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன (ரூ. 117 000 VAT உட்பட).

2 ரூ. 200 000 கிரயமான பொருட்கள் ரூ. 295 000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டன (ரூ. 45 000 VAT உட்பட).

3 அமிதா ரேடர்ஸ் இற்கு ரூ. 400 000 கிரயமான பொருட்கள் ரூ. 590 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன (ரூ. 90 000 VAT உட்பட).

4 அமிதா ரேடர்ஸ் இற்கு ரூ. 59 000 இற்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளன (ரூ. 9 000 VAT உட்பட). இப் பொருட்களின் கிரயம் ரூ. 40 000 ஆகும்.

5. குமரன் ரேடர்ஸ் இன் மூலப் பதிவேடுகளில் **2, 3, 4** ஆகிய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் முறையே :
(1) பற்றுச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள்
(2) பற்றுச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள்
(3) வைப்புச்சிட்டை, பட்டியல், செலவுத்தாள்
(4) வைப்புச்சிட்டை, பட்டியல், வரவுத்தாள்
(5) பற்றுச்சீட்டு, பட்டியல், நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு (......)

6. 2026 ஜனவரி மாதத்திற்கான குமரன் ரேடர்ஸ் இன் விற்பனை நாளேட்டின் மொத்தத்தினைப் பொதுப் பேரேட்டில் பதிவதற்கான **சரியான** இரட்டைப்பதிவு:

| | விபரம் | வரவு. (ரூ.'000) | செலவு. (ரூ.'000) |
|---|---|---|---|
| (1) | வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 531 | |
| | விற்பனைக் கணக்கு | | 450 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 81 |
| (2) | வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 500 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | 90 | |
| | விற்பனைக் கணக்கு | | 590 |
| (3) | வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 590 | |
| | விற்பனைக் கணக்கு | | 500 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 90 |
| (4) | வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 750 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | 135 | |
| | விற்பனைக் கணக்கு | | 885 |
| (5) | வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 885 | |
| | விற்பனைக் கணக்கு | | 750 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 135 |

(......)

7. 31.01.2026 இலுள்ளவாறான VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் 31.01.2026 இல் முடிவடைந்த மாதத்திற்கான மொத்த இலாபமும்:

| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (ரூ.'000) | மொத்த இலாபம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | வரவு 9 | 140 |
| (2) | வரவு 18 | 150 |
| (3) | செலவு 9 | 140 |
| (4) | செலவு 9 | 150 |
| (5) | செலவு 18 | 140 |

(......)

[பக். 3 ஐப் பார்க்க

● **8, 9 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வணிகமொன்று அதன் அனைத்துக் காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்கின்றது. 01.03.2026 இல் காசுக் கணக்கு மீதியானது அத்திகதியிலுள்ள வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கியிருந்தது. 31.03.2026 இல் காசுக்கணக்கின் வரவு மீதி ரூ. 300 000 ஆக இருந்தது. இது அத்திகதியிலுள்ள வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. 04.04.2026 இல் பெறப்பட்ட வங்கிக்கூற்றினைப் பரிசீலனை செய்த போது வேறுபாட்டுக்கான காரணங்களாகப் பின்வருவன அடையாளம் காணப்பட்டன.

**A** - 31.03.2026 இல் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 200 000 காசோலையானது 02.04.2026 இல் தேறியிருந்தது.

**B** - கடன்பட்டோர் ஒருவர் 31.03.2026 இல் ரூ. 100 000 ஐ நேரடியாக வங்கியில் வைப்பிலிட்டிருந்தார்.

**C** - கடன் தவணைக் கட்டணத்துக்காக ரூ. 60 000 நிலையான கட்டளைக் கொடுப்பனவொன்று வங்கியால் 31.03.2026 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது (இக்கொடுப்பனவானது ரூ. 15 000 வட்டிச் செலவொன்றையும் உள்ளடக்கியுள்ளது).

**D** - 30.03.2026 இல் கடன்கொடுத்தோர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூ. 150 000 காசோலையொன்று 03.04.2026 இல் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மேலேயுள்ள **A, B** என்பன நிலுவையாகவுள்ள தமது மீதிகளைத் தீர்ப்பதற்கு வணிகத்தின் இரண்டு கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசைக் குறிக்கிறது. மேலும் நேரடி வைப்புக்கள் மற்றும் நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் வங்கிக்கூற்றைப் பெற்ற பின்னரே வணிகத்தின் காசுக் கணக்கில் சீராக்கப்படுகின்றன.

**8.** 31.03.2026 இல் உள்ளவாறான வங்கிக்கூற்று மீதி மற்றும் திருத்திய காசுக்கணக்கு மீதி:

| | வங்கிக்கூற்று மீதி (ரூ.'000) | திருத்திய காசுக்கணக்கு மீதி (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 250 | 290 |
| (2) | 290 | 340 |
| (3) | 290 | 355 |
| (4) | 390 | 340 |
| (5) | 390 | 355 |

(......)

**9.** வங்கிக்கூற்று பெறப்பட்ட பின்னர் காசுக்கணக்கில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் காரணமாக 31.03.2026 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் வணிகத்தின் மொத்தப் பொறுப்புக்கள் என்பவற்றிலான **குறைவு**:

| | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் குறைவு (ரூ.'000) | மொத்தப் பொறுப்புக்களில் குறைவு (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 100 | 45 |
| (2) | 100 | 60 |
| (3) | 100 | 195 |
| (4) | 300 | 45 |
| (5) | 300 | 60 |

(......)

**10.** ஒரு தனியுடைமையாகிய மணி வியாபாரமானது 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்காக ரூ. 450 000 மொத்த இலாபத்தையும் ரூ. 280 000 தேறிய இலாபத்தையும் அறிக்கையிட்டுள்ளது. இவ்வருடத்தில் ரூ. 25 000 கிரயமான பொருட்கள் தீ காரணமாக முழுமையாக அழிவடைந்தன. இது கணக்குப் புத்தகங்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களைத் தயார்செய்வதில் 31.03.2026 இல் உள்ளவாறு இருப்புக் கிரயமானது அத்திகதியில் கிடைக்கக்கூடியதாகவிருந்த பௌதிக இருப்பினடிப்படையில் ரூ. 40 000 ஆகச் சரியாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. இத்திகதியில் இவ்விருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதியானது ரூ. 35 000 ஆக இருந்ததுடன், இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கமெதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான **சரியான** மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம்:

| | மொத்த இலாபம் (ரூ.'000) | தேறிய இலாபம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 425 | 275 |
| (2) | 470 | 240 |
| (3) | 475 | 250 |
| (4) | 475 | 275 |
| (5) | 480 | 275 |

(......)

**11.** உற்பத்தி நிறுவனமொன்றானது 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்களை வழங்கியுள்ளது.

| | ரூ.'000 |
|---|---|
| மூலக்கிரயம் | 490 |
| மொத்த உற்பத்தி மேந்தலைகள் | 160 |
| மொத்த உற்பத்திக் கிரயம் | 850 |
| 01.04.2025 இலுள்ளவாறான முடிவுப்பொருள் இருப்பு | 100 |
| 31.03.2026 இலுள்ளவாறான முடிவுப்பொருள் இருப்பு | 140 |
| விற்பனைகள் | 1 500 |

நடைமுறை வேலை இருப்பானது மொத்த உற்பத்திக் கிரயத்தில் சீராக்கம் செய்யப்படுகிறது.

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



01.04.2025 இலுள்ளவாறான நடைமுறை வேலை இருப்புடன் ஒப்பிடும் போது 31.03.2026 இலுள்ளவாறான நடைமுறை வேலை இருப்பில் **குறைவு** மற்றும் மொத்த இலாப விகிதம்:

| | **நடைமுறைவேலை இருப்பில் குறைவு (ரூ.'000)** | **மொத்த இலாப விகிதம் (%)** |
|---|---|---|
| (1) | 200 | 43 |
| (2) | 200 | 46 |
| (3) | 360 | 43 |
| (4) | 360 | 46 |
| (5) | 400 | 46 |

(……)

**12.** தனிவியாபாரமான இராணி என்ரபிறைசஸ் ஆனது முறையாக கணக்கீட்டுப் பதிவுகளைப் பராமரிப்பதில்லை. இந்நிறுவனத்தின் 31.03.2026 மற்றும் 31.03.2025 இலுள்ளவாறான இருப்புக்கள் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **31.03.2026 இல் உள்ளவாறு (ரூ.)** | **31.03.2025 இல் உள்ளவாறு (ரூ.)** |
|---|---|---|
| இருப்புக்கள் | 60 000 | 40 000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 130 000 | 90 000 |

**மேலதிக தகவல்கள்:**

- அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
- 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்தில் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற மொத்தக்காசு ரூ. 570 000 ஆகும்.
- இந்நிறுவனமானது 25% மொத்த இலாப விகிதத்தைப் பேணுகிறது.

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்

| | **விற்பனைகள் (ரூ.)** | **கொள்வனவுகள் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 530 000 | 377 500 |
| (2) | 530 000 | 417 500 |
| (3) | 570 000 | 447 500 |
| (4) | 610 000 | 447 500 |
| (5) | 610 000 | 477 500 |

(……)

**13.** பின்வருவனவற்றுள் 1890 ஆம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்படி பங்குடமை தொடர்பில் **சரியான** கூற்று யாது?

(1) பங்காளர் பங்குடமைக்கு வழங்கும் கடனிற்கு 5% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவராவர்.
(2) ஏற்கனவேயுள்ள பங்காளர்கள் எண்ணிக்கையானது 20 இற்கும் குறைவாக இருக்கும் போது மட்டுமே புதிய பங்காளரை அனுமதிக்க முடியும்.
(3) முகாமை நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்காக பங்காளர் சம்பளத்தினைப் பெற உரித்துடையவர்கள் அல்லர்.
(4) இளைப்பாறும் பங்காளர் பங்குடமையின் நன்மதிப்பினை இலாபப் பகிர்வு விகிதத்தில் பகிர உரித்துடையவராவர்.
(5) இளைப்பாறும் பங்காளர் கொடுத்துத் தீர்க்கப்படாத உரிமையாண்மை மீதிக்கு ஆகக் குறைந்தது 5% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவராவர்.

(……)

**14.** பங்காளர்களின் உரிமைகள் தொடர்பில் எழுத்து மூலமான, வாய்மொழி மூலமான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் இல்லாதபோது 1890 பங்குடமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பின்வரும் கூற்றுக்களுள் **சரியானவை** எவை?

A - பங்காளர்கள் பங்குடமைக்குப் பங்களித்த மூலதனத்தின் மீது வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
B - பங்காளர்கள் பங்குடமையின் முகாமையில் பங்குகொள்வதற்காகச் சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
C - பங்காளர்கள் பங்குடமையின் இலாபங்கள் மற்றும் நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்கு உரித்துடையவர்கள்.
D - பங்காளர்கள் பங்குடமைக்கு வழங்கிய கடனுக்கு 5% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்கள்.

(1) A, C மாத்திரம் (2) B, D மாத்திரம் (3) C, D மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகிய எல்லாம் (……)

**15.** பின்வரும் தகவல்கள் சமந்தா, வனிதா பங்குடமையுடன் தொடர்பானவை.

| | **சமந்தா (ரூ.'000)** | **வனிதா (ரூ.'000)** |
|---|---|---|
| 31.03.2026 இலுள்ளவாறான மூலதன மீதி | 5 000 | 3 000 |
| மூலதனத்திற்கு வட்டி (வருட இறுதியிலுள்ள மூலதன மீதியில் 10% வருடாந்த வட்டி) | ? | ? |
| வருடாந்த ஊதியம் | 1 200 | 800 |
| இலாபப் பங்கு (சமந்தா, வனிதா ஆகியோரின் இலாபப்பகிர்வு விகிதம் 3:2 ) | ? | ? |

பங்குடமையானது 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கு ரூ. 7 000 000 இலாபத்தினை ஈட்டியுள்ளது.

[பக். 5 ஐப் பார்க்க

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான சமந்தாவின் இலாபப் பங்கும் வனிதாவிற்குப் பகிரப்பட்ட மொத்த இலாபமும் முறையே:

| | சமந்தா (ரூ.'000) | வனிதா (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 2 520 | 1 680 |
| (2) | 2 520 | 2 780 |
| (3) | 4 200 | 2 800 |
| (4) | 4 220 | 1 680 |
| (5) | 4 220 | 2 780 |

(......)

- **16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான கிருபா PLC இல் வரைவு நிதிக்கூற்றுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| மொத்த இலாபம் | 16 000 |
| ஏனைய வருமானம் | 1 500 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 7 500 |
| நிதிச் செலவுகள் | 1 000 |
| வருமானவரிச் செலவு | 1 200 |

**மேலதிக தகவல்கள்:**

கம்பனியின் கட்டடங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகிய இரண்டும் இரண்டாம் தடவையாக 31.03.2026 இலும் முதற் தடவையாக 31.03.2025 இலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இம் மீள்மதிப்பீடுகளால் ஏற்பட்ட மிகை மற்றும் குறை பின்வருமாறு:

| | மிகை / (குறை) 31.03.2026 இல் உள்ளவாறு (ரூ.'000) | மிகை / (குறை) 31.03.2025 இல் உள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| கட்டடங்கள் | (1 500) | 1 000 |
| இயந்திரங்கள் | 1 200 | (2 000) |

கட்டடங்களிற்கான மீள்மதிப்பீட்டுக் குறை ரூ. 1 500 000 ஆனது செயற்பாட்டுச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், இயந்திரங்களின் மீள்மதிப்பீட்டு மிகை ரூ. 1 200 000 ஆனது 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**16.** 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான **சரியான** ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000):
(1) (1 000) (2) (500) (3) (300) (4) 200 (5) 1 200 (......)

**17.** 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான **சரியான** இலாபம் (ரூ.'000):
(1) 6 600 (2) 7 800 (3) 8 300 (4) 8 800 (5) 9 300 (......)

**18.** 'LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மீதான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்' இன்படி பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை **சரியானது / சரியானவை**?

A - கணக்கீட்டு மதிப்பீடுகளானவை அளவீட்டு நிச்சயமற்ற தன்மைக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பணரீதியான தொகைகளாகும்.

B - கணக்கீட்டு மதிப்பீடுகள் மீதான மாற்றமானது நடைமுறைக் காலத்து நிதிக்கூற்றுக்களிலும் தொடர்புடைய முன்னைய காலங்களிற்குப் பின்நோக்கிய வகையிலும் சீராக்கம் செய்யப்படுகிறது.

C - நிதிக்கூற்றுக்களின் மூலங்களை இனங்காணல், அளவீடு செய்தல், சமர்ப்பித்தல் அல்லது வெளிப்படுத்தல் தொடர்பில் வழுக்கள் ஏற்படலாம்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) A, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

**19.** 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான அகிலா PLC இன் நிதிக்கூற்றுக்களை 30.06.2026 இல் வழங்குவதற்குப் பணிப்பாளர்கள் அதிகாரமளித்துள்ளனர்.

'LKAS 10 - அறிக்கையிடும் காலத்துக்குப் பிந்திய நிகழ்வுகள்' இன்படி பின்வரும் நிகழ்வுகளில் எவை இக்கம்பனியின் 'சீராக்கும் நிகழ்வுகள்' எனக் கருத்திற்கொள்ளப்படலாம்?

A - 31.03.2026 இல் ரூ. 50 மில்லியனாக நிதிநிலைமைக்கூற்றில் அறிக்கையிடப்பட்டிருந்த தொழிற்சாலைக் கட்டடம் 18.04.2026 இல் ஏற்பட்ட தீ காரணமாக அழிவடைந்தது.

B - 31.03.2026 இல் உள்ளவாறு ரூ. 800 000 மீதியுள்ள கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்தவரென 25.05.2026 இல் வெளிப்படுத்தப்பட்டது.

C - 2026 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கம்பனியின் விற்பனைகள் ரூ. 5 000 000 ஆல் குறைவடைந்தது.

D - நடைமுறை வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 1 500 000 கிரயமுள்ள சொத்தொன்று புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை. இது 15.06.2026 இல் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையொன்றில் வெளிப்படுத்தப்பட்டது.

(1) A, B மாத்திரம் (2) B, D மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) A, B, D மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (......)

[பக். 6 ஐப் பார்க்க

**20.** மேகலா PLC ஆனது தரக்குறைவான மூலப்பொருளொன்றின் விநியோகத்துக்காக ரூ. 5 000 000 நட்ட ஈடு கோரி 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துள் அதன் விநியோகத்தர்களில் ஒருவருக்கெதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தது. மேகலா PLC இன் சட்ட வல்லுநரின் அபிப்பிராயத்தின்படி இவ்வழக்கின் முடிவானது கம்பனிக்குச் சாதகமாக அமையும் என்பதற்கான உயர் சாத்தியத்தன்மை காணப்படுகிறது.

'LKAS 37 - ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்' இன்படி 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கு மேகலா PLC இன் நிதிக்கூற்றுக்களில் இவ்வழக்குக்கான **சரியான** கணக்கீட்டு நடைமுறை

(1) ரூ. 5 000 000 இற்கான ஏற்பாடொன்று நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படல் வேண்டும்.
(2) நிகழத்தக்க பொறுப்பாக ரூ. 5 000 000 நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும்.
(3) நிகழத்தக்க சொத்தாக ரூ. 5 000 000 நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும்.
(4) நிகழத்தக்க பொறுப்பு ரூ. 5 000 000 ஆனது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.
(5) நிகழத்தக்க சொத்து ரூ. 5 000 000 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். (……)

**21.** 01.04.2025 இல் உள்ளவாறு கோமதி PLC இன் மொத்த உரிமையாண்மை ரூ.16 000 000 ஆகும். 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான கம்பனியுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு:

| | ரூ.'000 |
|---|---|
| நிறுத்தி வைத்த வருவாய்களின் மூலதனமாக்கல் | 4 000 |
| வருடத்துக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 5 000 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்குலாபங்கள் | 1 500 |
| சாதாரண பங்குகளின் பொது வழங்கலுக்காக விண்ணப்பங்களுடன் சேகரிக்கப்பட்ட காசு | 6 000 |

01.03.2026 இல் கம்பனி பங்கொன்று ரூ. 50 படி 100 000 பங்குகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கோரியது. மொத்த வழங்கல் விலையானது விண்ணப்பங்களுடன் செலுத்தப்பட வேண்டும். 120 000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் கம்பனி 31.03.2026 இல் பங்குகளுக்கான ஒதுக்கலை மேற்கொண்டது. விண்ணப்பங்களுடன் பெறப்பட்ட மேலதிக காசானது 05.04.2026 இல் திருப்பியனுப்பப்பட்டது.

31.03.2026 இல் உள்ளவாறான மொத்த உரிமையாண்மை (ரூ.'000):

(1) 19 500 (2) 24 500 (3) 25 500 (4) 28 500 (5) 29 500 (……)

- **22, 23 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் ஒரு உற்பத்திக் கம்பனியாகிய தட்சா PLC இன் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| **31.03. 2026 இல் முடிவடைந்த வருடத்துக்கானது (ரூ.'000):** | |
|---|---|
| விற்பனைக் கிரயம் | 72 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 28 000 |
| வட்டிச் செலவுகள் | 5 000 |
| வருமான வரிச் செலவு | 2 500 |

| | **31.03.2026 இல் உள்ளவாறு (ரூ.'000)** | **31.03.2025 இல் உள்ளவாறு (ரூ.'000)** |
|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| இருப்பு | 12 000 | 10 000 |
| முற்செலுத்திய செலவுகள் | 2 000 | - |
| வியாபாரக் கடன்பட்டோர் | 22 000 | 18 000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 10 000 | 8 000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் :** வியாபாரக் கடன்கொடுத்தோர் | 20 000 | 28 000 |

**மேலதிக தகவல்கள்:**

- 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த விற்பனைகளில் 75% ஆனவை கடன் விற்பனைகளாகவும் மொத்த இலாப வீதம் 40% ஆகவும் இருந்தது.
- வருடத்துக்கான வேலை நாட்களின் எண்ணிக்கை 360 எனக் கொள்க.

**22.** 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான இருப்பு வைத்திருக்கும் காலம் மற்றும் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் முறையே:

| | **இருப்பு வைத்திருக்கும் காலம் (நாட்கள்)** | **கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (நாட்கள்)** |
|---|---|---|
| (1) | 50 | 60 |
| (2) | 55 | 60 |
| (3) | 55 | 80 |
| (4) | 60 | 80 |
| (5) | 60 | 88 |

(……)

[பக். 7 ஐப் பார்க்க

**23.** 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான விரைவுச் சொத்து விகிதமும் வட்டிக்காப்பு விகிதமும் முறையே:

| | விரைவுச் சொத்து விகிதம் | வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்) |
|---|---|---|
| (1) | 1.6 | 3.0 |
| (2) | 1.6 | 4.0 |
| (3) | 1.7 | 3.0 |
| (4) | 2.3 | 3.5 |
| (5) | 2.3 | 4.0 |

(……)

**24.** பல பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் *'நேர்க் கிரயங்கள்' 'உற்பத்தி மற்றும் உற்பத்தியல்லா மேந்தலைகள்'* தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை **சரியானது / சரியானவை?**

A - நேர்க்கிரயங்கள் உற்பத்திப் பொருளொன்றுடன் நேரடியாக அடையாளம் காணப்படக்கூடியதாக இருக்கும் அதேவேளை உற்பத்தி மேந்தலைகள் உற்பத்திப் பொருட்களால் உறிஞ்சப்படுகின்றன.

B - எல்லா நேர்க் கிரயங்களும் இயல்பாக மாறும் தன்மை கொண்டவையாக இருக்கும் அதேவேளை எல்லா மேந்தலைகளும் இயல்பாக நிலையான தன்மை கொண்டவையாக உள்ளன.

C - நேர்க் கிரயங்களும் உற்பத்தி மேந்தலைகளும் உற்பத்திக் கிரயங்களாகக் கொள்ளப்படும் அதேவேளை உற்பத்தியல்லா மேந்தலைகள் காலக் கிரயங்களாகக் கொள்ளப்படுகின்றன.

(1) B மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (……)

● **25, 26 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் உற்பத்தி வணிகமொன்றில் வழமையாகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் உருப்படியொன்றுக்கான 2026 மார்ச் மாதத்துடன் தொடர்புடையவையாகும். இவ்வணிகம் A மற்றும் B ஆகிய இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றது.

| திகதி | விபரம் |
|---|---|
| 01.03.2026 | ஆரம்ப இருப்பு - 3 000 கிலோகிராம், கிலோகிராம் ஒன்று ரூ. 160 |
| 10.03.2026 | ஒரு கிலோகிராம் ரூ. 200 படி 5 000 கிலோகிராம் கொள்வனவு செய்யப்பட்டது. |
| 16.03.2026 | உற்பத்திப் பொருள் A இன் உற்பத்திக்காக 2 000 கிலோகிராம் வழங்கப்பட்டது. |
| 27.03.2026 | உற்பத்திப் பொருள் B இன் உற்பத்திக்காக 3 000 கிலோகிராம் வழங்கப்பட்டது. |

**25.** இருப்பு அளவீட்டில் நிறையளிக்கப்பட்ட சராசரிக் கிரய முறை (WAC) பயன்படுத்தப்பட்டால், **உற்பத்திப் பொருள் A இற்கு** வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் மற்றும் 31.03.2026 இல் உள்ளவாறு மூலப்பொருள் இருப்பின் கிரயம்:

| | வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் (ரூ.'000) | 31.03.2026 இல் உள்ளவாறு மூலப்பொருள் இருப்பின் கிரயம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 320 | 600 |
| (2) | 370 | 555 |
| (3) | 555 | 370 |
| (4) | 555 | 555 |
| (5) | 560 | 600 |

(……)

**26.** இருப்பு அளவீட்டில் முதல் - உள் - முதல் - வெளி (FIFO) முறை பயன்படுத்தப்பட்டால் **உற்பத்திப்பொருள் B** இற்கு வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் மற்றும் 31.03.2026 இல் உள்ளவாறு மூலப்பொருள் இருப்பின் கிரயம்:

| | வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் (ரூ.'000) | 31.03.2026 இல் உள்ளவாறு மூலப்பொருள் இருப்பின் கிரயம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 480 | 560 |
| (2) | 480 | 600 |
| (3) | 560 | 560 |
| (4) | 560 | 600 |
| (5) | 880 | 600 |

(……)

**27.** பின்வரும் தகவல்கள் 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிசான் வியாபாரத்தின் சம்பளப் பட்டியலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

- ஊழியர் சேமலாப நிதிக்கான (EPF) தொழிலாளர் மற்றும் தொழில் கொள்வோரின் பங்களிப்புக்கள் முறையே 10% மற்றும் 15% ஆகும். மேலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான (ETF) தொழில் கொள்வோரின் பங்களிப்பு 3% ஆகும்.
- EPF மற்றும் ETF பங்களிப்புக்கள் ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.
- நடைமுறை வருடத்துக்கான EPF நிதியத்துக்குச் செய்யப்பட்ட மொத்தப் பங்களிப்பு ரூ. 750 000 ஆகும்.
- நடைமுறை வருடத்தில் காப்புறுதித் திட்டத்துக்கான பங்களிப்பாக ரூ. 70 000 ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டது.

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிசான் வியாபாரத்தின் மொத்த ஊழியக் கிரயம் (ரூ.'000):

(1) 3 000 (2) 3 450 (3) 3 540 (4) 3 610 (5) 3 840 (……)

[பக். 8 ஐப் பார்க்க

**28.** நிமால் என்ரபிறைசஸ் ஆனது ரயர்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரு வணிகமாகும். இவ்வணிகமானது இயந்திரம் மற்றும் முடிவுறுத்தல் எனும் இரண்டு உற்பத்திக் கிரய நிலையங்களையும் பராமரிப்பு என்னும் சேவைக் கிரய நிலையத்தினையும் கொண்டுள்ளது.

பின்வரும் கூற்றுக்களில் எது / எவை நிமால் என்ரபிறைசஸ் நிறுவனத்தின் உற்பத்தி மேந்தலைக்கான கணக்கீடு தொடர்பில் **சரியானது / சரியானவை?**

A - உற்பத்தி மேந்தலைகளானவை அவற்றுடன் தொடர்புடைய கிரய நிலையங்களிற்கு ஒதுக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படும்.

B - மேந்தலை உறிஞ்சல் வீதங்களானவை மூன்று கிரய நிலையங்களிற்கும் கணிக்கப்படும்.

C - பராமரிப்பு கிரய நிலையத்தின் மேந்தலைகளானவை இயந்திரம் மற்றும் முடிவுறுத்தல் கிரய நிலையங்களிற்கு மீள் பகிரப்படும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, C மாத்திரம் (5) B, C மாத்திரம் (……)

**29.** பின்வரும் கூற்றுக்களுள் எவை உற்பத்தி நிறுவனமொன்றின் கிரயம் - தொகை - இலாபம் (CVP) பகுப்பாய்வு தொடர்பில் **சரியானவை?**

A - சமப்பாட்டுப் புள்ளியில் நிறுவனமொன்றின் மொத்தப் பங்களிப்பும் மொத்த நிலையான கிரயமும் சமமாகும்.

B - சமப்பாட்டுப் புள்ளியானது நிறுவனமொன்றின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் மிகக் குறைந்த செயற்பாட்டு மட்டத்தினைப் பிரதிபலிக்கும்.

C - சமப்பாட்டுப் புள்ளிக்கு அப்பால் பெறப்படும் பங்களிப்பானது நிறுவனத்தின் நிலையான கிரயத்தினை மீளப்பெற பங்களிப்புச் செய்யும்.

D - ஏனைய சகல காரணிகளும் மாறாது இருக்கும்போது விற்பனை விலை அதிகரிப்பானது நிறுவனத்தின் சமப்பாட்டுப் புள்ளியைக் குறைக்கும்.

(1) A, C மாத்திரம் (2) B, C மாத்திரம் (3) A, B, D மாத்திரம்
(4) A, C, D மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (……)

**30.** நீண்டகால முதலீட்டுச் செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்வது தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை **சரியானது / சரியானவை?**

A - செயற்றிட்டமொன்றின் நேர்க்கணிய தேறிய நிகழ்காலப் பெறுமதியானது (NPV) அச்செயற்றிட்டம் அதன் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதத்தினைவிட அதியுயர் வருவாயை உழைக்கிறது என்பதைப் பிரதிபலிக்கும்.

B - நிறுவனமொன்று இரண்டு செயற்றிட்டங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியேற்படும்போது அதிக நேர்க்கணிய NPV கொண்ட செயற்றிட்டம் தெரிவு செய்யப்படும்.

C - செயற்றிட்டமொன்றை மதிப்பீடு செய்வதற்கு திரும்பப் பெறும் காலத்தைப் பயன்படுத்தும்போது எப்பொழுதும் அச்செயற்றிட்டத்தின் முழுமையான காசுப்பாய்ச்சலும் கருத்திற் கொள்ளப்படும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (……)

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

**31.** நிறுவனமொன்றின் அக்கறையுடையோரால் கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்தல் தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மை (T)** அல்லது **பொய் (F)** எனக் குறிப்பிடுக.

| | **கூற்று** | **உண்மை / பொய்** |
|---|---|---|
| A - | வெளிவாரி அக்கறையுடையோர் மாத்திரம் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுப்பதில் கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்துகின்றனர். | …………… |
| B - | நிறுவனமொன்றின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு முகாமையாளர்கள் நிதிசாராத் தகவல்களையும் பயன்படுத்துகின்றனர். | …………… |
| C - | முகாமையாளர்கள் நிறுவனத்தின் செபற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் முகாமைக் கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்துகின்றனர். | …………… |
| D - | உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது நிறுவனமொன்றின் வரிப் பொறுப்பை மதிப்பீடு செய்வதற்காக அந்நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களைப் பயன்படுத்துகின்றது. | …………… |

**32.** றூபன் என்பவர் 01.01.2025 இல் ரூ. 750 000 காசாக முதலீடு செய்து ஆலோசனைச் சேவை ஒன்றைத் தொடங்கினார். 31.12.2025 இலுள்ளவாறு பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| **சொத்துக்கள் (ரூ.'000)** | = | **பொறுப்புக்கள் (ரூ.'000)** | + | **உரிமையாண்மை (ரூ.'000)** |
|---|---|---|---|---|
| 880 | | 180 | | 700 |

பின்வரும் தகவல்கள் 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவை.

- இந்நிறுவனத்தின் சொத்துக்கள், பெறப்பட்ட ரூ. 320 000 வங்கிக்கடன் மற்றும் உழைக்கப்பட்ட சேவை வருமானம் காரணமாக ரூ. 420 000 ஆல் அதிகரித்துள்ளன.
- ரூ. 140 000 வங்கிக்கடனைத் தீர்த்தல், ரூ. 70 000 உரிமையாளர் காசுப்பற்று மற்றும் காசாகச் செலுத்திய செயற்பாட்டு, நிதியிடல் செலவுகள் காரணமாக, சொத்துக்கள் ரூ. 290 000 ஆல் குறைவடைந்துள்ளன.

[பக். 9 ஐப் பார்க்க

31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) இலாபம் (ரூ.'000) : ............................

(ஆ) மொத்த சேவை வருமானம் (ரூ.'000) : ............................

(இ) மொத்தச் செலவுகள் (ரூ.'000) : ............................

- **33, 34 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அரிசி மொத்த வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரியான 'நதீசா ரேடர்ஸ்' ஆல் 2026 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**A** - சுமதி அரிசி ஆலையிலிருந்து ரூ. 1 200 000 இற்கு 5 000 கிலோகிராம் அரிசி கடனிற்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

**B** - 'அமலன் ரேடர்ஸ்' இற்கு 2 500 கிலோகிராம் அரிசி கடனிற்கு ரூ. 750 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

**C** - 'அமலன் ரேடர்ஸ்' இடமிருந்து 5% காசுக் கழிவு கழித்த பின்னரான முழுத்தொகையைத் தீர்ப்பதற்காக காசோலையொன்று பெறப்பட்டது.

**D** - உரிமையாளரின் சொந்தப் பாவனைக்காக 50 கிலோகிராம் அரிசி வழங்கப்பட்டது. இந்த அரிசியின் கிரயம் ரூ. 12 000 ஆகும்.

**E** - நிறையிடும் இயந்திரத்திற்கு 6 மாத வாடகையாக 01.01.2026 இல் ரூ. 120 000 செலுத்தப்பட்டது.

**33.** மேற்குறிப்பிட்ட **A, B, C, D** ஆகிய கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றினதும் பதிவிற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பதிவேடுகளைக் குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்** | **மூலப்பதிவேடு** |
|---|---|
| **A** | .................................................... |
| **B** | .................................................... |
| **C** | .................................................... |
| **D** | .................................................... |

**34.** கொடுக்கல் வாங்கல் '**D**' மற்றும் '**E**' இற்கான பின்வரும் நாளேட்டுப் பதிவுகளை எழுதுக.

(அ) உரிமையாளர் பற்றிய பொருட்களுக்கான பதிவு

(ஆ) 2026 ஜனவரி மாதத்திற்கான நிறையிடும் இயந்திரத்தின் வாடகைச் செலவுக்கான சீராக்கற்பதிவு

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| (அ)<br><br>(2026 ஜனவரி மாதத்திற்கான உரிமையாளர் பற்றிய பொருட்களைப் பதிவிடல்) | | |
| (ஆ)<br><br>(2026 ஜனவரி மாத்திற்கான நிறையிடும் இயந்திர வாடகைச் செலவிற்கான சீராக்கம்) | | |

**35.** நிறுவனமொன்றின் பொதுப் பேரேட்டில் பராமரிக்கப்படும் பின்வரும் ஒவ்வொரு கணக்கினதும் பொருத்தமான வகைகளைக் குறிப்பிடுக.

| **கணக்கு** | **வகை** |
|---|---|
| A - பற்றுக்கள் | ............................................................ |
| B - வெளித்திரும்பல் | ............................................................ |
| C - இழப்பீட்டிற்கான ஏற்பாடு | ............................................................ |
| D - திரண்ட பெறுமானத்தேய்வு | ............................................................ |

**36.** மொத்த வியாபாரியான 'விமலன் என்ரபிரைசஸ்' இன் பின்வரும் ஒவ்வொரு நிலமைகளிற்கும் **மிகவும் பொருத்தமான** கணக்கீட்டு எண்ணக்கருவைக் குறிப்பிடுக.

| **நிலைமை** | **கணிக்கீட்டு எண்ணக்கரு** |
|---|---|
| A - 2022 ஆம் வருடத்தில் ரூ. 2 மில்லியனிற்குக் கொள்வனவு செய்த காணியினை 2026 ஆம் வருடத்தில் அதே பெறுமதியில் அறிக்கையிடல் | ............................ |
| B - ரூ. 310 000 கடனிற்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான தொகையினை வியாபார வருமதிகள் மற்றும் வருவாயாக இனங்காணல் | ............................ |
| C - சொத்தொன்றாக ஐந்து வருட குத்தகை ஒப்பந்தத்தில் பெறப்பட்ட மோட்டார் வாகன சொத்துப்பாவனை உரிமையை இனங்காணல் | ............................ |
| D - கொடுக்குமதியான நீண்டகாலக் கடன் ஒன்றின் ஒரு பகுதியினை அடுத்துவரும் நிதி வருடத்தில் நடைமுறைப் பொறுப்பாகச் சமர்ப்பித்தல் | ............................ |

[பக். 10 ஐப் பார்க்க

**37.** 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்தில் இலாபநோக்கமற்ற நிறுவனமாகிய கிராம முன்னேற்றச் சங்கம் பின்வரும் அன்பளிப்புக்களைப் பெற்றது.

A - இச்சங்கத்துக்கு நூலகக் கட்டடமொன்றைக் கட்டுவதற்காக 15.10.2025 இல் உள்ளூர்க் கம்பனியொன்றிடமிருந்து ரூ. 1 500 000 அன்பளிப்பொன்று பெறப்பட்டது. 01.12.2025 இல் நூலகக் கட்டடத்தின் கட்டுமானச் செயற்பாடுகளுக்காக ரூ. 200 000 செலுத்தப்பட்டது.

B - சூழலியல் பாதுகாப்புத் தொடர்பான குறும்படம் ஒன்றைத் தயாரிப்பதற்காக 01.03.2026 இல் வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து ரூ. 500 000 பெறப்பட்டது. இது தொடர்பில் பட இயக்குநர் ஒருவருடன் 15.03.2026 இல் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி இயக்குநர் கட்டணமான ரூ. 150 000 இனை 2 தவணைகளில் செலுத்துவதற்கு இணங்கிக்கொள்ளப்பட்டது. முதலாவது கொடுப்பனவாகிய ரூ. 75 000 ஆனது 31.03.2026 இல் செலுத்தப்பட்டது.

கணக்கீட்டு வருடமொன்றில் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படும் அளவு நன்கொடைகளை வருமானமாக இனங்காண்பது இச்சங்கத்தின் கொள்கையாகும்.

மேலே குறிப்பிட்ட நன்கொடைகள் தொடர்பில் பின்வருவனவற்றைக் காண்க.

(அ) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கு இனங்காணப்பட்ட நன்கொடை வருமானம் (ரூ.'000) :..........................................

(ஆ) 31.03.2026 இல் உள்ளவாறான உரிமையாண்மையில் தேறிய அதிகரிப்பு (ரூ.'000) :..........................................

● **38, 39 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

லாலும் கமலும் பங்குடமை வணிகமொன்றை நடத்தி வருகின்றனர். 01.04.2025 இல் நிமல் ஒரு புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார்.

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

**மூலதனக் கணக்குகள் (ரூ.'000)**

| | லால் | கமல் | நிமல் | | லால் | கமல் | நிமல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01.04.2025 இல் மீதி கீ. கொ.வ. | 10 000 | 5 000 | - |
| | | | | காசு | - | - | ? |
| நன்மதிப்பு | 600 | 360 | 240 | நன்மதிப்பு | 720 | 480 | - |

**நடைமுறைக் கணக்குகள் (ரூ.'000)**

| | லால் | கமல் | நிமல் | | லால் | கமல் | நிமல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01.04.2025 இல் மீதி கீ. கொ.வ. | 400 | 200 | - |
| | | | | சம்பளங்கள் | 2 500 | 2 000 | 1 800 |
| காசு | 1 000 | 1 000 | 1 000 | மூலதனவட்டி | ? | ? | 376 |

**மேலதிக தகவல்கள்:**

- பங்காளர்கள் வருட முடிவிலுள்ள மூலதனக் கணக்கு மீதியில் 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்களாவர்.

**38.** நிமல் பங்காளராக அனுமதிக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) பங்குடமையின் நன்மதிப்பு (ரூ.'000) : ...............................

(ஆ) நிமலால் கொண்டு வரப்பட்ட காசு (ரூ.'000) : ...............................

**39.** லால், கமல் மற்றும் நிமல் பங்குடமையின் பின்வருவனவற்றை அடையாளங் காண்க.

(அ) இலாபப் பகிர்வு விகிதம் : ...............................

(ஆ) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான பற்றுக்கள் (ரூ.'000) : ...............................

(இ) மூலதன மீதிகள் மீதான மொத்த வட்டி (ரூ.'000) : ...............................

**40.** நிதியறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம் 2018 இன்படி பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய கணக்கீட்டுத் தகவல்களின் **மிகப் பொருத்தமான** தரரீதியான பண்பினைக் குறிப்பிடுக.

A - நிதிக்கூற்றுக்களில் வழங்கப்படும் தகவல்கள் அதன் பயன்பாட்டாளர்களின் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்த முடியும். ...............................

B - நிதிக்கூற்றுக்களில் வழங்கப்படும் தகவல்கள் நடுநிலை, முழுமைத்தன்மை மற்றும் வழுக்களற்றவையாக இருத்தல் வேண்டும். ...............................

C - தகவல்கள் அவற்றின் முக்கியத்துவத்தை இழப்பதற்கு முன்னர் அவற்றைப் பயன்பாட்டாளர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். ...............................

D - நிதிக்கூற்றுக்களிலுள்ள உருப்படிகளுக்கு இடையேயான ஒத்த தன்மைகளையும் வேறுபாடுகளையும் பயன்பாட்டாளர்கள் அடையாளங்கண்டு கொள்வதற்கும் விளங்கிக்கொள்வதற்கும் தகவல்களை பயன்பாட்டாளர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். ...............................

[பக். 11 ஐப் பார்க்க

**41.** 'LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்' இன்படி பொருத்தமான பதங்களைப் பயன்படுத்திப் பின்வரும் கூற்றுக்களைப் பூர்த்தி செய்க.

A - சொத்தொன்றின் கிரயத்திலிருந்து அதன் எஞ்சிய பெறுமதியைக் கழித்து வரும் தொகையானது ........................ ஆக அடையாளம் காணப்படுவதுடன் பெறுமானத்தேய்வானது சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்குமான இத்தொகையின் .................... ஒதுக்கீடு ஆகும்.

B - நிறுவனமொன்று ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்கண்ட பின்னர் ................................ அல்லது ................................ ஐ அளவீட்டுக்கான கணக்கீட்டுக் கொள்கையாகத் தெரிவு செய்ய வேண்டும்.

**42.** சண்முகன் PLC ஆனது 01.04.2022 இல் ரூ. 12 000 000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி முறையே 10 வருடங்கள், ரூ. 2 000 000 ஆகும். கம்பனி 31.03.2024 இல் இவ்வியந்திரத்தை ரூ. 6 000 000 இற்கு மீள்மதிப்பீடு செய்தது. இத்திகதியில் அதன் எஞ்சிய பெறுமதி பூச்சியம் எனவும், அதன் மீதமுள்ள பயன்தரு ஆயுட்காலத்தில் மாற்றமில்லை எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது. பின்னர் 01.04.2025 இல் இவ்வியந்திரத்தின் மீதமுள்ள பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் என மீளமைக்கப்பட்டதுடன், அதன் எஞ்சிய பெறுமதி பூச்சியமாக மதிப்பிடப்பட்டது. இவ்வியந்திரத்தின் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) 31.03.2024 இல் உள்ளவாறு மீள்மதிப்பீட்டு மிகை/(குறை) (ரூ.'000) : ............................

(ஆ) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான பெறுமானத் தேய்வு (ரூ.'000) : ............................

(இ) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான பெறுமானத் தேய்வு (ரூ.'000) : ............................

**43.** 'LKAS 2 - இருப்புக்கள்' இன்படி பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மையா (T)** அல்லது **பொய்யா (F)** எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை / பொய் |
|---|---|---|
| A - | இருப்பானது கிரயம், தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவோ அப்பெறுமதியில் அளவீடு செய்யப்பட வேண்டும். | ............... |
| B - | குறிப்பிட்ட அடையாளங்காணப்பட்ட முறையைப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பினும் இருப்புக்களின் கிரயமானது கிரயச் சூத்திரத்தைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட வேண்டும். | ............... |
| C - | இருப்புக்கள், வழமையாக உருப்படிக்கு உருப்படி அடிப்படையில் தேறிய தேறக்கூடிய பெறுமதிக்குக் குறைக்கப்படுகின்றன. | ............... |
| D - | இருப்புக்களின் கிரய அளவீட்டில் மாற்றற் கிரயம் மற்றும் விற்பனைக் கிரயம் ஆகிய இரண்டும் உள்ளடக்கப்படுகின்றன. | ............... |

**44.** அகரன் PLC ஆனது 01.04.2025 இல் மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கான குத்தகை உடன்பாடொன்றைச் செய்தது. இத்திகதியில், கம்பனி ஆரம்பக் கொடுப்பனவாக ரூ. 6 000 000 ஐ செலுத்தியதுடன், ஆரம்ப நேர்க்கிரயமாக ரூ. 250 000 ஏற்பட்டது. குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதி ரூ. 15 000 000 ஆகும். குத்தகை வட்டி ரூ. 800 000 உட்பட முதலாவது குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. 2 300 000 ஆனது 31.03.2026 இல் செலுத்தப்பட்டது.

'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான இக்குத்தகை தொடர்பில் பின்வரும் தேறிய காசுப் பாய்சல்கள்:

(அ) முதலீட்டு நடவடிக்கைகளுக்கான தேறிய காசுப்பாய்ச்சல்கள் (ரூ.'000) : ..............................

(ஆ) நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் (ரூ.'000) : ..............................

**45.** கம்பனியொன்றின் கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மையா (T)** அல்லது **பொய்யா (F)** எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை / பொய் |
|---|---|---|
| A - | கம்பனியால் சரக்கிருப்பானது வினைத்திறனாக முகாமை செய்யப்படுவதை அதியுயர் இருப்புப் புரள்வு விகிதம் எடுத்துக்காட்டுகிறது. | ............... |
| B - | பங்கொன்றிற்கான உழைப்பானது சாதாரண பங்குதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்ட கம்பனியின் இலாபத்தின் பகுதியினைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. | ............... |
| C - | கம்பனியொன்றின் உரிமையாண்மை மீதான வருவாயினைக் கணிக்கும்போது அக்காலத்திற்கான வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் பயன்படுத்தப்படுகிறது. | ............... |
| D - | உரிமையாண்மைக்குக் கடன் விகிதமானது கம்பனியின் கடன் மூலதனத்தின் விகிதாசாரத்தை மொத்த மூலதனத்தின் சதவீதமாகக் காட்டுகின்றது. | ............... |

**46.** நிறுவனமொன்றின் மூலப்பொருட்கள் முகாமை தொடர்பில் பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்திசெய்க.

A - சிக்கனக் கட்டளைத் தொகை என்பது அதன் மொத்த வருடாந்த கட்டளைக் கிரயமும் வருடாந்த இருப்பு வைத்தல் கிரயமும் ........................ இருக்கும் போதுள்ள இருப்பின் கட்டளைத் தொகையாகும்.

B - விநியோகத்தர்களிடமிருந்து சரக்குகள் பெறப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக களஞ்சியத் திணைக்களமானது ........................ இனைத் தயாரிக்கின்றது.

C - மூலப்பொருட்களின் இருப்புமட்டமானது அதன் ........................ அடையும் போது களஞ்சியத் திணைக்களமானது .............................. இனைக் கொள்வனவுத் திணைக்களத்திற்கு வழங்குகிறது.

[பக். 12 ஐப் பார்க்க

Past Papers Wiki



**47.** ஆடைத் தொழிற்சாலையொன்றில் வழமையாகப் பயன்படுத்தப்படும் துணியின் மதிப்பிட்ட வருடாந்தக் கேள்வி 400 000 மீற்றர் ஆகும். இதன் கட்டளையொன்றிற்கான கட்டளைக் கிரயம் ரூ. 25 000 ஆகவும் வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம் மீற்றர் ஒன்றிற்கு ரூ. 50 ஆகவும் இருந்தது. தொழிற்சாலையின் பழைய அனுபவத்தின் அடிப்படையில் மதிப்பிட்ட நாளாந்த நுகர்வு மற்றும் விநியோகக் காலம் பின்வருமாறு இருந்தது.

| | ஆகக் குறைந்தது | ஆகக்கூடியது |
|---|---|---|
| நாளாந்த நுகர்வு (மீற்றர்) | 1 100 | 2 300 |
| விநியோகக் காலம் (நாட்கள்) | 3 | 7 |

இத்துணியின் மறுகட்டளைத் தொகையானது சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) இன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

இத்துணியுடன் தொடர்புடைய பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) : .............................. மீற்றர்

(ஆ) மறுகட்டளை மட்டம் : .............................. மீற்றர்

(இ) ஆகக்கூடிய சரக்கிருப்பு மட்டம் : .............................. மீற்றர்

**48.** உற்பத்தி நிறுவனமொன்று தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறது. இப்பொருளின் 50 000 செயற்பாட்டு மட்டத்தில் பின்வரும் கிரய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| நேர் மூலப்பொருள் கிரயம் | 5 250 |
| நேர் ஊழியக் கிரயம் | 7 500 |
| ஏனைய நேர்க் கிரயம் | ? |
| உற்பத்தி மேந்தலைகள் | 1 250 |
| நிர்வாக மற்றும் விற்பனை மேந்தலைகள் | 2 700 |

**மேலதிக தகவல்கள்:**

- அனைத்து நேர்க்கிரயங்களும் மாறும் கிரயங்களாகும்.
- ஏனைய நேர்க்கிரயங்களானவை மொத்த மூலக்கிரயத்தின் 25% ஆக மதிப்பிடப்பட்டுள்ளன.
- உற்பத்தி மேந்தலைகளானவை நேர் ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்படுகிறது.
- 50 000 அலகுகளை உற்பத்தி செய்வதற்கான பாதிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள் 125 000 ஆகும்.
- நிர்வாக மற்றும் விற்பனை மேந்தலைகள் செயற்பாட்டு மட்டம் 50 000 அலகுகள் வரை நிலையானதாகும்.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) அலகொன்றிற்கான மதிப்பிடப்பட்ட மூலக்கிரயம் (ரூ.) : ..............................

(ஆ) அலகொன்றிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ.) : ..............................

(இ) செயற்பாட்டு மட்டம் 35 000 அலகுகளில் மொத்தக் கிரயம் (ரூ.'000) : ..............................

**49.** உற்பத்திக் கம்பனியொன்று தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறது. இதன் ஒரு காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் 15 000 அலகுகள் ஆகும். சமப்பாட்டுப் புள்ளி 6 000 அலகுகளில் மொத்த மாறும் கிரயம் ரூ. 300 000 ஆகும். இந்த உற்பத்திப் பொருளின் அலகொன்றிற்கான விற்பனை விலை ரூ. 80 ஆகும்.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) அலகொன்றிற்கான பங்களிப்பு (ரூ.) : ..............................

(ஆ) மொத்த நிலையான கிரயம் (ரூ.'000) : ..............................

(இ) பெறுமதியில் பாதுகாப்பு எல்லை (ரூ.'000) : ..............................

(ஈ) 10 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் இலாபம் (ரூ.'000) : ..............................

**50.** வரையறுத்த RDK லிமிட்டட் ஆனது 'அல்பா' மற்றும் 'வீற்றா' என்னும் இரண்டு செயற்றிட்டங்களின் சாத்தியத்தன்மை பற்றி ஆராய்கிறது. இவ்விரண்டு செயற்றிட்டங்களிற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | அல்பா | வீற்றா |
|---|---|---|
| ஆரம்ப முதலீடு (ரூ.'000) | (2 250) | (2 250) |
| செயற்றிட்டத்தின் ஆயுட்காலம் (வருடங்கள்) | 5 | 5 |
| வருடாந்த தேறிய செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதி (ரூ.'000) | 2 000 | 1 800 |
| 5 ஆம் வருட முடிவில் பெறப்படும் எஞ்சிய பெறுமதியின் நிகழ்காலப் பெறுமதி (ரூ.'000) | 124 | 217 |

இச்செயற்றிட்டங்களுக்குத் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு இல்லை எனக் கருதுக.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) ஒவ்வொரு செயற்றிட்டத்தினதும் நிகழ்காலப் பெறுமதி (NPV) (ரூ.'000):

அல்பா : ................................................

வீற்றா : ................................................

(ஆ) NPV அடிப்படையிலான சிபார்சு : ................................................

(இ) சிபார்சுக்கான காரணம் : ................................................

❊ ❊ ❊

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

උත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා පමණි

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ ஒவ்வொரு வினாவுக்கும் **புதிய தாளில்** விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ✳ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- ✳ இவ்வினாத்தாளுக்கு **200** புள்ளிகள் உரித்தாகும்.

**1.** நிமல் PLC ஆனது கணினிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதுடன் விற்பனை செய்யப்பட்ட கணினிகளுக்கான பராமரிப்புச் சேவைகளையும் வழங்குகின்றது. 31.03.2026 இல் உள்ளவாறான அதன் சுருக்கிய பரீட்சைமீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கிரயம் | 235 000 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - 01.04.2025 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | | 40 000 |
| சொத்துப் பாவனை உரிமை | 62 500 | |
| 01.04.2025 இல் மூலப்பொருள் இருப்பு | 2 500 | |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | | 13 680 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 41 800 | |
| விற்பனை வருவாய்கள் | | 488 000 |
| பராமரிப்புச் சேவை வருவாய் | | 14 400 |
| 01.04.2025 இல் உழைக்கப்படாத பராமரிப்புச் சேவை வருவாய் | | 5 000 |
| மொத்த உற்பத்திக் கிரயம் | 244 700 | |
| விநியோகக் கிரயம் | 35 500 | |
| நிர்வாகச் செலவுகள் | 43 500 | |
| நிதிக் கிரயம் | 1 500 | |
| குத்தகைப் பொறுப்பு | | 40 608 |
| உத்தரவாதத்தின் கீழ் செலுத்திய பழுதுபார்த்தல் செலவுகள் | 2 250 | |
| 01.04.2025 இல் உத்தரவாதத்துக்கான ஏற்பாடு | | 2 750 |
| செலுத்திய வருமான வரி | 12 500 | |
| 01.04.2025 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | | 1 650 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் (பங்கொன்று ரூ. 10 படி வழங்கப்பட்டது) | | 70 000 |
| 01.04.2025 இல் நிறுத்திவைத்த வருவாய்கள் | | 25 662 |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபங்கள் | 20 000 | |
| | **701 750** | **701 750** |

[பக். 2 ஐப் பார்க்க

**மேலதிக தகவல்கள்:**

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் தகவல்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

(i) கம்பனியானது 31.03.2026 இல் உள்ள ஒவ்வொரு 7 பங்குகளுக்கும் 1 பங்கு என்றவாறு பங்கொன்றை ரூ. 10 விலையில் வழங்கி நிறுத்திவைத்த வருவாய்களை மூலதனமாக்கியது. இது தொடர்பில் புத்தகங்களில் எவ்வித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) 31.03.2026 இல் உள்ளவாறான உத்தரவாதத்துக்கான ஏற்பாடு ரூ. 2 950 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது.

(iii) பரீட்சைமீதியில் காணப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வின் உள்ளடக்கம் பின்வருமாறு.

| | கிரயம் (ரூ.'000) | 01.04.2025 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு (ரூ.'000) |
|---|---|---|
| உற்பத்திப் பொறிகள் | 150 000 | 25 000 |
| அலுவலக உபகரணங்கள் | 85 000 | 15 000 |
| | **235 000** | **40 000** |

- 01.10.2025 இல் ரூ. 50 000 000 இற்கு புதிய உற்பத்திப் பொறியொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இது கணக்குகளில் சரியாகப் பதியப்பட்டுள்ளது.
- 01.01.2024 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 25 000 000 கிரயமான அலுவலக உபகரணமொன்று 01.01.2026 இல் ரூ. 8 000 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இவ்விற்பனை வருமானமானது காசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் விற்பனை வருவாய் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்விற்பனை தொடர்பில் வேறு பதிவுகளெதுவும் புத்தகங்களில் பதியப்படவில்லை.
- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு முறையில் கிரயத்தில் வருடமொன்றுக்கு 20% இல் பெறுமானத்தேய்விடப்படுகின்றன. எனினும், நடைமுறை வருடத்துக்கான பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை.
- அலுவலக உபகரணங்கள் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

(iv) பரீட்சைமீதியில் காட்டப்பட்டுள்ள உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பீடு செய்வதில் பின்வருவன கவனத்திற் கொள்ளப்படவில்லை.

- ஆரம்ப மற்றும் இறுதி மூலப்பொருள் இருப்பு
- நடைமுறை வருடத்துக்கான பெறுமானத்தேய்வு

(v) 31.03.2026 இல் மூலப்பொருள் இருப்பின் கிரயம் ரூ. 2 200 000 ஆக இருந்தது. நடைமுறை வருடத்தின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் நடைமுறைவேலை இருப்பு எதுவும் இருக்கவில்லை.

(vi) கம்பனியானது கனினிகள் விற்பனை மற்றும் பராமரிப்புச் சேவைகளை வழங்குதல் ஆகிய இரண்டிலுமிருந்து வருவாய்களை உழைக்கின்றது. விற்பனை உடன்பாட்டின்படி கம்பனியானது விற்பனை செய்யப்பட்ட கனினிகளை வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்குமாறு வேண்டப்படுகின்றது. இச்செயற்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- கம்பனியானது விற்பனை உடன்பாடு செய்யப்படும் போதே கனினிகளின் விற்பனைப் பெறுமதி, பராமரிப்பு சேவைக் கட்டணம் ஆகிய இரண்டையும் சேகரிக்கின்றது.
- 01.04.2025 இல் ஆரம்ப முடிவுப்பொருள் இருப்பு எதுவும் இருக்கவில்லை.
- கனினி ஒன்றின் விற்பனை விலை ரூ. 400 000 ஆகும். நடைமுறை வருடத்தில் கம்பனி 1200 கனினிகளை உற்பத்தி செய்துள்ளதுடன், இக்கனினிகள் முழுவதையும் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளையும் செய்துள்ளது. இவற்றுள் 1 100 கனினிகள் மட்டும் நடைமுறை வருடத்தில் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. மிகுதி 100 கனினிகளும் 31.03.2026 இல் கம்பனியின் களஞ்சியத்தில் மீதியாக இருந்தன. எனினும், கம்பனி 1 200 கனினிகளதும் விற்பனைப் பெறுமதியை நடைமுறை வருடத்தின் விற்பனை வருவாயாக இனங்கண்டுள்ளது.
- பரீட்சைமீதியில் காணப்படும் பராமரிப்புச் சேவை வருவாயானது வாடிக்கையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்தப் பராமரிப்புக் கட்டணத்தைப் பிரதிபலிக்கின்றது. எனினும், 31.03.2026 இல் உள்ளவாறு பராமரிப்புச் சேவையுடன் தொடர்புடைய 25% செயற்றிறன் கடப்பாடுகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- முன்னைய வருடத்தின் உழைக்கப்படாத பராமரிப்புச் சேவை வருவாயுடன் தொடர்புடைய அனைத்துப் பராமரிப்புச் சேவைகளும் நடைமுறை வருடத்தில் வழங்கப்பட்டுள்ளன.

[பக். 3 ஐப் பார்க்க

(vii) கம்பனியானது 01.04.2025 இல் 4 வருட காலப்பகுதிக்கு மோட்டார் வாகனமொன்றின் சொத்துப்பாவனை உரிமையை குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் பெற்றுள்ளது. 01.04.2025 இல் மொத்தக் குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதி ரூ. 62 500 000 ஆக இருந்ததுடன் இது சரியாகப் பதியப்பட்டிருந்தது. முதலாவது வருடாந்தக் குத்தகைக் கட்டணம் ரூ. 21 892 000 ஆனது 31.03.2026 இல் செலுத்தப்பட்டது. இது குத்தகைப் பொறுப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் காசுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பில் வேறு சீராக்கங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2026 மற்றும் 31.03.2027 ஆகிய திகதிகளில் முடிவடைந்த வருடங்களுக்கான குத்தகை வட்டியானது முறையே ரூ. 9 375 000 மற்றும் ரூ. 7 500 000 ஆகும். இம்மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகும். குத்தகைக்கால முடிவில் அதன் உடைமையானது கம்பனிக்கு மாற்றப்படும். இம்மோட்டார் வாகனமானது வாடிக்கையாளர்களுக்குக் கணினிகளை விநியோகிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. 013842

(viii) பரீட்சைமீதியில் காணப்படும் செலுத்திய வருமான வரியானது கடந்த வருடத்துக்காகச் செலுத்திய ரூ. 1 900 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த வருமான வரிப் பொறுப்பு ரூ. 13 500 000 என மதிப்பிடப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

'LKAS 1 - நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பிரசுர நோக்கத்துக்கான நிமல் PLC இன் பின்வரும் நிதிக் கூற்றுக்கள்:

(1) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று

(2) 31.03.2026 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

(3) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(4) வருவாய், வரிக்கு முன் இலாபம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், சொத்துப் பாவனை உரிமை மற்றும் இருப்பு என்பவற்றுக்கான குறிப்புக்கள்

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**2.** (அ) மதீஸ் என்ரபிறைசஸ் என்பது ஓர் உற்பத்தி நிறுவனமாகும். பின்வரும் தகவல்கள் இந்நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் 'X' தொடர்பானது.

- வருடாந்தக் கேள்வி - 16 000 அலகுகள்
- மறுகட்டளைத் தொகை [சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) அடிப்படையில்] - 2 000 அலகுகள்
- கட்டளைக் கிரயம் - கட்டளை ஒன்றிற்கு ரூ. 500
- அலகொன்றிற்கான வருடாந்த இருப்பு வைத்தற் கிரயமானது அலகொன்றிற்கான கொள்வனவு விலையின் 10% இற்குச் சமமாகும்.
- வாரமொன்றிற்கான ஆகக்கூடிய நுகர்வு - 360 அலகுகள்
- ஆகக்கூடிய இருப்பு மட்டம் - 3 320 அலகுகள்
- ஆகக்குறைந்த இருப்பு மட்டம் - 720 அலகுகள்
- மறுகட்டளை மட்டம் - 2 520 அலகுகள்
- ஆகக்குறைந்த விநியோகக் காலம் - 5 வாரங்கள்

**வேண்டப்படுவது:**

மூலப்பொருள் 'X' இற்கான பின்வருவன:

(1) சராசரி இருப்பு மட்டம் (அலகுகள்)

(2) ஆகக்கூடிய விநியோகக் காலம் (வாரங்கள்)

(3) வாரமொன்றிற்கான ஆகக்குறைந்த நுகர்வு (அலகுகள்)

(4) வருடமொன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டளைகளின் எண்ணிக்கை

(5) வருடாந்தக் கட்டளைக் கிரயம்

(6) அலகொன்றிற்கான வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம்

(7) அலகொன்றின் கொள்வனவு விலை

(8) சிக்கனக்கட்டளைத் தொகை மட்டத்தில் வருடாந்த மொத்தக் கிரயம்

**(10 புள்ளிகள்)**

[பக். 4 ஐப் பார்க்க

02030000320113842

(ஆ) சேட்டுக்கள் மற்றும் காற்சட்டைகளை உற்பத்தி செய்யும் ஆடைத் தொழிற்சாலையானது 'வெட்டுதல்' மற்றும் 'தைத்தல்' என்னும் இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் 'களஞ்சியம்' என்னும் சேவைத் திணைக்களமொன்றையும் கொண்டுள்ளது. இவ்விரண்டு உற்பத்தி திணைக்களங்களும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளதுடன் களஞ்சியத் திணைக்களமானது வேறொரு கட்டடத்தில் அமைந்துள்ளது.

அடுத்த காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டு மட்டமானது 70 000 அலகுகளாக இருப்பதுடன் இம்மட்டத்தில் பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி மேந்தலைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு:

| விபரம் | மொத்தம் (ரூ.'000) | உற்பத்தித் திணைக்களங்கள் (ரூ.'000) | களஞ்சியத் திணைக்களம் (ரூ.'000) |
|---|---|---|---|
| உற்பத்தி இயந்திரங்களுக்கான காப்புறுதிக் கட்டணம்..... | 40 | 40 | - |
| களஞ்சியப் பராமரிப்புக் கிரயம்.......................................... | 160 | - | 160 |
| உற்பத்தி முகாமையாளர்களுக்கான சம்பளங்கள்............ | 320 | 320 | - |
| உற்பத்தி இயந்திரத்துக்கான பெறுமானத்தேய்வு.............. | 360 | 360 | - |
| நேரில் கூலிகள்.......................................................... | 400 | 350 | 50 |
| கட்டடங்களுக்கான பெறுமானத்தேய்வு............................ | 480 | 400 | 80 |
| மின்சாரக் கட்டணம்.................................................... | 80 | ? | ? |
| பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான சம்பளங்கள்......... | 240 | ? | ? |
| தகவல் முறைமைச் செயற்பாட்டுக் கிரயம்....................... | 420 | ? | ? |
| ஏனைய உற்பத்தி மேந்தலைகள்.................................... | 500 | ? | ? |

**மேலதிக தகவல்கள்:**

(i) உற்பத்தி இயந்திரத்துக்கான காப்புறுதிக் கட்டணம்: வெட்டுதல் திணைக்களத்துக்கு ரூ. 27 500, தைத்தல் திணைக்களத்துக்கு ரூ. 12 500.

(ii) உற்பத்தி மற்றும் சேவைத் திணைக்களங்களுடன் தொடர்புடைய ஏனைய தகவல்கள்:

| | வெட்டுதல் | தைத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை.................................................... (உற்பத்தி முகாமையாளர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட) | 96 | 71 | 11 |
| உற்பத்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை........................................ | 10 | 6 | - |
| பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை.................................... | 6 | 5 | 1 |
| மொத்த கிலோவாற்ஸ் மணித்தியாலங்கள்............................................. | 10 000 | 7 000 | 3 000 |
| கட்டடங்களின் தளப்பரப்பு (சதுர மீற்றர்)................................................ | 3 000 | 1 000 | 500 |
| உற்பத்தி இயந்திரங்களின் கொண்டு செல்தொகை (ரூ.'000).................. | 1 900 | 1 700 | - |
| தகவல் முறைமையினால் உருவாக்கப்படும் அறிக்கைகளின் எண்ணிக்கை.. | 24 | 24 | 24 |
| பாதீடு செய்யப்பட்ட மொத்த இயந்திர மணித்தியாலங்கள்...................... | 5 000 | 1 000 | - |
| பாதீடு செய்யப்பட்ட மொத்த நேர் ஊழிய மணித்தியாலங்கள்................ | 500 | 4 000 | - |

(iii) ஏனைய உற்பத்தி மேந்தலைகளானவை இரண்டு உற்பத்தித் திணைக்களங்கள் மற்றும் களஞ்சியத்திற்கிடையே முறையே 7:3 என்னும் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும். உற்பத்தித் திணைக்களங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் ஏனைய உற்பத்தி மேந்தலைகளானவை 'வெட்டுதல்' மற்றும் 'தைத்தல்' திணைக்களங்களுக்கிடையே முறையே 4:3 என்னும் விகிதத்தில் பகிரப்படும்.

(iv) களஞ்சியத்தின் மொத்த மேந்தலையானது 'வெட்டுதல்' மற்றும் 'தைத்தல்' திணைக்களங்களுக்கிடையே முறையே 5:3 என்ற விகிதப்படி மீள்பகிரப்படும்.

(v) 'வெட்டுதல்' மற்றும் 'தைத்தல்' திணைக்களங்களின் மொத்த மேந்தலைகளானவை முறையே இயந்திர மணித்தியால அடிப்படையிலும், நேர் ஊழிய மணித்தியால அடிப்படையிலும் உறிஞ்சப்படுகிறது.

(vi) அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு ஒவ்வொரு திணைக்களத்திலும் செலவழித்த உண்மையான நேரம்

| | சேட்டுக்கள் | காற்சட்டைகள் |
|---|---|---|
| நேர் ஊழிய மணித்தியாலங்கள் | | |
| வெட்டுதல் | 2 | 1 |
| தைத்தல் | 1 | 0.5 |
| இயந்திர மணித்தியாலங்கள் | | |
| வெட்டுதல் | 2 | 2 |
| தைத்தல் | 1 | 1 |

(vii) அலகொன்றுக்கான நேர்கிரயங்கள் பின்வருமாறு:

| | சேட்டுக்கள் (ரூ.) | காற்சட்டைகள் (ரூ.) |
|---|---|---|
| நேர் மூலப்பொருட் கிரயம் | 500 | 600 |
| நேர் ஊழியக் கிரயம் | 480 | 430 |

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வுக்கான அடிப்படைகளைத் தெளிவாகக் காட்டக்கூடியதான மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(2) வெட்டுதல் மற்றும் தைத்தல் திணைக்களங்களுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்

(3) ஒரு சேட் மற்றும் ஒரு காற்சட்டை ஆகியவற்றின் மொத்த உற்பத்திக் கிரயம் (ஒவ்வொரு கிரய உருப்படியையும் தனித்தனியாகக் காட்டுக.)

(4) மொத்த உற்பத்திக் கிரயத்தில் 25% இலாப வீதம் பேணப்படின்:

(i) சேட் ஒன்றினது விற்பனை விலை மற்றும் காற்சட்டை ஒன்றினது விற்பனை விலை

(ii) 25 000 காற்சட்டைகள் விற்பனை செய்யப்படும் போது மொத்த இலாபம் **(30 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

3\. (அ) சரண் மற்றும் ராஜ் ஆகியோர் 01.04.2026 இல் பங்குடமையொன்றை ஆரம்பித்து வியாபாரமொன்றை நடத்துகின்றனர். அவர்களுக்கான உரித்துக்கள் தொடர்பில் இரு பங்காளருக்குமிடையில் எழுத்து மூலமான, வாய்மொழி மூலமான அல்லது நடத்தை மூலமான உடன்படிக்கை எதுவுமில்லை. இவ்வணிகமானது பெறுமதி சேர் வரிக்குப் (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளது.

2026 ஏப்ரல் மாதத்தில் இவ்வணிகத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

| இல. | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|
| 1 | சரண் மற்றும் ராஜ் ஆகியோரால் தத்தமது மூலதனமாக ரூ. 600 000 வீதம் முதலீடு செய்யப்பட்டது. |
| 2 | 01.04.2026 இல் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காக ஒவ்வொன்றும் ரூ. 300 000 பெறுமதியான 3 கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பில் ராஜ் இனால் ரூ. 360 000 செலுத்தப்பட்டதுடன் மீதி ரூ. 540 000 வணிகத்தால் செலுத்தப்பட்டது. ராஜ் இனால் செலுத்தப்பட்ட தொகையை அவரால் வணிகத்துக்கு வழங்கப்பட்ட கடனாகக் கருதுவதென இணங்கப்பட்டது. (இக்கொள்வனவு தொடர்பில் VAT எதுவுமில்லை எனக்கொள்க.) |
| 3 | அமல் என்ரபிறைசஸ் இடமிருந்து ரூ. 590 000 இற்குப் பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன (ரூ. 90 000 VAT உட்பட). |
| 4 | அமல் என்ரபிறைசஸ் இடமிருந்து ரூ. 59 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பழுதடைந்ததன் காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டன (ரூ. 9 000 VAT உட்பட). |
| 5 | அமல் என்ரபிறைசஸ் இற்கு ரூ. 20 000 காசுக் கழிவு பெறப்பட்ட பின்னர், ரூ. 511 000 செலுத்தப்பட்டது. |
| 6 | ரூ. 177 000 காசுக்குப் பொருட்கள் விற்கப்பட்டன (ரூ. 27 000 VAT உட்பட). இப்பொருட்களின் கிரயம் ரூ. 120 000 ஆகும். |
| 7 | சுனில் என்ரபிறைசஸ் இற்கு ரூ. 354 000 இற்குக் கடனுக்குப் பொருட்கள் விற்கப்பட்டன (ரூ. 54 000 VAT உட்பட). இப்பொருட்களின் கிரயம் ரூ. 240 000 ஆகும். |
| 8 | சுனில் என்ரபிறைசஸ் இற்கு விற்கப்பட்ட ரூ. 29 500 பெறுமதியான பொருட்கள் திருப்பியனுப்பப்பட்டன (ரூ. 4 500 VAT உட்பட). இப்பொருட்களின் கிரயம் ரூ. 20 000. |
| 9 | சுனில் என்ரபிறைசஸ் இடமிருந்து, ரூ. 24 500 காசுக் கழிவொன்று அனுமதிக்கப்பட்ட பின்னர், ரூ. 300 000 பெறப்பட்டது. |
| 10 | சரண் மற்றும் ராஜ் ஆகியோருக்கு அவர்களின் தனிப்பட்ட பாவனைக்கு முறையே ரூ. 30 000, ரூ. 20 000 கிரயமுள்ள பொருட்கள் வழங்கப்பட்டன. |
| 11 | ராஜ் இன் கடன் மீது மாதாந்தக் கடன் வட்டி செலுத்தப்பட்டது. |
| 12 | கணினிகளிற்கு மாதாந்தப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டது. (கணினியின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும். அவற்றின் எஞ்சிய பெறுமதி பூச்சியம் ஆகும்.) |

013842

0103000003320113842

[பக். 6 ஐப் பார்க்க

**வேண்டப்படுவது:**

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 12 வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை (பெறுமதியுடன்) காட்டுக. பெறுமதி அதிகரிக்குமாயின் (+) எனவும், குறைவடையுமாயின் (-) எனவும் ஒவ்வொரு பெறுமதிக்கும் முன்னால் குறிப்பிடுக. கொள்வனவுகள், கொள்வனவுத் திரும்பல்கள், விற்பனைகள் மற்றும் விற்பனைத் திரும்பல்கள் என்பவற்றின் மீதான VAT ஆனது கணக்கீட்டுச் சமன்பாட்டிலுள்ள VAT கட்டுப்பாட்டு நிரலில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். (இவ்வினாவுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.)

**(ரூ.'000)**

| கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | | | = | பொறுப்புக்கள் | | + | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி, உபகரணங்கள் | இருப்பு | வியாபார வருமதிகள் | காசு | ராஜ் கடன் | வியாபாரக் கொடுக்குமதிகள் | VAT கட்டுப்பாடு | |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| ---- | | | | | | | | |
| ---- | | | | | | | | |
| 30.04.2026 இல் மீதி | | | | | | | | |

(2) உரிமையாண்மை நிரலின் அடிப்படையில் கணிப்பீடுகளைக் காண்பித்து 30.04.2026 இல் முடிவடைந்த மாதத்துக்கான பங்குடைமையின் இலாபம்

(3) 30.04.2026 இல் முடிவடைந்த மாதத்துக்கான சரண் மற்றும் ராஜ் ஆகியோரின் தனித்தனியான இலாபப்பங்கு

**(25 புள்ளிகள்)**

**(ஆ)** 'ரமணி' விளையாட்டுக் கழகமானது 01.04.2025 இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் தகவல்கள் 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான விளையாட்டுக் கழகத்துடன் தொடர்புடையனவாகும்.

(i) **ஆயுள் அங்கத்துவம்:**

- 01.04.2025 இல் 4 அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 500 000 ஐ விளையாட்டுக் கழகத்தின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்ததன் மூலம் ஆயுள் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டனர். ஆயுள் அங்கத்துவக் கட்டணத்தை 10 வருடங்களுக்குச் சமமான வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

(ii) **வருடச் சந்தா:**

- அங்கத்தவர் ஒருவருக்கான வருடச் சந்தா ரூ. 60 000 ஆகும். இது மாதாந்தம் சமமான தொகையாக ரூ. 5 000 படி செலுத்தப்படலாம். ஒவ்வொரு அங்கத்தவரும் கழகத்தில் சேரும்போது நுழைவுக் கட்டணமாக ரூ. 10 000 செலுத்துதல் வேண்டும். இந்நுழைவுக் கட்டணத்தை அது பெறப்படும் வருடத்தில் வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.
- நடைமுறை வருடத்தில் வருடாந்த அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்ட அங்கத்தவர்களின் விபரங்கள் வருமாறு:

| திகதி | இணைந்தவர்களின் எண்ணிக்கை | செலுத்திய சந்தா (ரூ.'000) | செலுத்திய நுழைவுக் கட்டணம் (ரூ.'000) |
|---|---|---|---|
| 01.04.2025 | 20 | 1 200 | 200 |
| 01.07.2025 | 15 | 750 | 150 |

- 01.07.2025 இல் 10 அங்கத்தவர்கள் ஒரு வருடத்துக்கான சந்தாவைச் செலுத்தி இணைந்து கொண்டனர். மிகுதி 5 அங்கத்தவர்கள் 6 மாதங்களுக்கான சந்தாவை மட்டும் செலுத்தியிருந்தனர்.

(iii) **நன்கொடைகள்:**

- 01.10.2025 இல் விளையாட்டுக் கழகமானது விளையாட்டு அமைச்சிடமிருந்து ரூ. 400 000 நன்கொடையொன்றை பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கெனப் பெற்றுக்கொண்டது. இந்நன்கொடையானது 01.10.2025 இலிருந்து 4 வருட காலப்பகுதிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வருடாந்தப் பயிற்சிச் செலவுகள் ரூ. 100 000 ஆகும். இச்செலவுகள் வருடம் முழுவதற்கும் சமமாக ஏற்பட்டன.
- 01.11.2025 இல் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் ரூ. 750 000 பெறுமதியான உடற்பயிற்சிக்கூட உபகரணங்களை நன்கொடையாக வழங்கினார்.
- வருடமொன்றில் ஏற்பட்ட அனைத்து நன்கொடைகளுடனும் தொடர்புடைய செலவுகளுக்குச் சமமான தொகையை வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

(iv) ஏனையவை:

- நடைமுறை வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட காசுக் கொடுப்பனவுகள்: 01.07.2025 இல் ரூ. 800000 கிரயத்தில் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு மற்றும் பாடசாலை மாணவர்களின் பயிற்சிச் செலவுகள் உள்ளடங்கலாகச் செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 630000 செலுத்தப்பட்டது.
- விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக்கூட உபகரணங்கள் ஆகிய இரண்டுக்கும் வருடத்துக்குக் கிரயத்தில் 20% பெறுமானத்தேய்விடப்படுகின்றது. விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுத் திகதியிலிருந்து பாவனைக்குத் தயாராக இருந்ததுடன் உடற்பயிற்சிக்கூட உபகரணங்கள் 01.12.2025 இலிருந்து பாவனைக்குத் தயாராக இருந்தன.

**வேண்டப்படுவது:**

ரமணி விளையாட்டுக் கழகம் தொடர்பில் பின்வருவன:

(1) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான சந்தாக் கணக்கு

(2) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று

(3) 31.03.2026 இல் உள்ளவாறான உரிமையாண்மையின் உள்ளடக்கம் **(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**4. (அ)** மொத்த வியாபாரமான 'அஜந்தன் ரேடர்ஸ்' ஆனது பொருட் கொள்வனவுகளையும் விற்பனைகளையும் கடன் அடிப்படையிலும், காசிற்கும் மேற்கொள்கிறது. இவ்வணிகமானது பெறுமதி சேர் வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பொருட்களை அதன் விற்பனை விலையில் 20% இலாபம் வைத்து விற்பனை செய்கிறது.

பின்வரும் தகவல்கள் 31.01.2026 இல் முடிவடைந்த மாதத்துடன் தொடர்பானவை.

(i) 01.01.2026 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகள்:

| | ரூ.'000 |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 4 800 |
| இருப்பு | 300 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 950 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 700 |
| செலுத்தவேண்டிய VAT | 36 |
| காசு | 150 |

(ii) 01.01.2026 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து 18.01.2026 இல் காசு பெறப்பட்டது.

(iii) 01.01.2026 இல் உள்ளவாறான வியாபாரக் கடன் கொடுத்தோருக்குக் கொடுக்குமதியான தொகையும் செலுத்தவேண்டிய VAT உம் 22.01.2026 இல் செலுத்தப்பட்டது.

(iv) 2026 ஜனவரி மாதத்திற்கான கடன் கொள்வனவுகளும் கடன் விற்பனைகளும்:

**கொள்வனவு நாளேடு (ரூ.'000)**

| திகதி | விபரம் | தொகை | கொள்வனவு | VAT |
|---|---|---|---|---|
| 08.01.2026 | அழகன் ரேடர்ஸ் | 590 | 500 | 90 |
| 18.01.2026 | சமிதா ரேடர்ஸ் | 826 | 700 | 126 |
| **மொத்தம்** | | **1 416** | **1 200** | **216** |

- வியாபாரக் கடன்கொடுத்தோர் பொருட்களைக் கொள்வனவு செய்த திகதியிலிருந்து தமக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு 30 நாட்கள் கடன் தவணைக் காலத்தை வழங்குவதுடன், முழுத்தொகையும் 15 நாட்களிற்குள் செலுத்தப்படின் 10% கழிவினையும் வழங்குகிறது.
- அழகன் ரேடர்ஸ் இற்குச் செலுத்த வேண்டிய மீதியானது 20.01.2026 இல் செலுத்தப்பட்டது.

**விற்பனை நாளேடு (ரூ.'000)**

| திகதி | விபரம் | தொகை | விற்பனை | VAT |
|---|---|---|---|---|
| 12.01.2026 | குமுது ரேடர்ஸ் | 1 062 | 900 | 162 |
| 20.01.2026 | சங்கா ரேடர்ஸ் | 708 | 600 | 108 |
| **மொத்தம்** | | **1 770** | **1 500** | **270** |

- 'அஜந்தன் ரேடர்ஸ்' ஆனது வியாபாரக் கடன்பட்டோர் தமது மீதிகளைச் செலுத்துவதற்கு விற்பனை செய்த திகதியிலிருந்து 30 நாட்கள் கடன் தவணைக் காலத்தை அனுமதித்துள்ளதுடன், முழுத்தொகையும் 15 நாட்களிற்குள் செலுத்தப்படின் 10% கழிவினையும் அனுமதித்துள்ளது.
- 'குமுது ரேடர்ஸ்' இடமிருந்து கிடைக்கவேண்டிய முழுத் தொகையும் 22.01.2026 இல் பெறப்பட்டது. சங்கா ரேடர்ஸ் ஆனது அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகையை இரண்டு சம தவணைக் கட்டணங்களாகச் கொடுத்துத் தீர்ப்பதற்குச் சம்மதித்துள்ளதுடன் முதலாம் தவணைக் கட்டணமானது 30.01.2026 இல் பெறப்பட்டது.

[பக். 8 ஐப் பார்க்க

(v) 2026 ஜனவரி மாதத்தில் காசுக் கொள்வனவுகளும் காசு விற்பனைகளும்:

| | தொகை (ரூ.'000) |
|---|---|
| 25.01.2026 இல் காசுக் கொள்வனவு (ரூ. 54 000 VAT உட்பட) | 354 |
| 28.01.2026 இல் காசு விற்பனை (ரூ. 72 000 VAT உட்பட) | 472 |

(vi) 31.01.2026 இல் முடிவடைந்த மாதத்தில் ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 520 000 ஆகும். இது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மாதாந்தப் பெறுமானத்தேய்வு ரூ. 50 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. மீதி காசாகச் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது:**

(1) 2026 ஜனவரி மாதத்திற்கான பின்வரும் மூல ஏடுகள்:
   (i) காசுப் பெறுவனவுகள் நாளேடு (ii) காசுக் கொடுப்பனவுகள் நாளேடு

(2) காசுப் பெறுவனவுகள் நாளேடு மற்றும் காசுக் கொடுப்பனவுகள் நாளேடுகளின் மொத்தங்களைப் பொதுப் பேரேட்டில் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பல்கள் அவசியமானவை)

(3) 2026 ஜனவரி மாதத்திற்கான பொதுப் பேரேட்டில் பின்வரும் கணக்குகள்:
   (i) காசுக் கணக்கு (ii) விற்பனைக் கணக்கு
   (iii) கொள்வனவுக் கணக்கு (iv) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(4) 31.01.2026 இலுள்ளவாறான இருப்புக் கிரயம் மற்றும் 31.01.2026 இல் முடிவடைந்த மாதத்திற்கான மொத்த இலாபம்

**(25 புள்ளிகள்)**

**(ஆ)** மதன் PLC ஆனது தனது செயற்பாடுகளை விரிவுப்படுத்துவதற்குப் புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கான செயற்றிட்டமொன்றைக் கருத்திற்கொண்டுள்ளது. இந்த இயந்திரத்தின் கிரயம் ரூ. 28 000 000 ஆகும். இவ்வியந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி முறையே 5 வருடங்கள், ரூ. 3 000 000 ஆகும். மேலும், செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் தொழிற்படு மூலதனமாக ரூ. 4 000 000 தேவைப்படுவதுடன் இதனைச் செயற்றிட்டத்தின் இறுதி வருடத்தில் மீளப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இச்செயற்றிட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு:

(i) வருடம் 1 மற்றும் வருடம் 2 இல் எதிர்பார்க்கப்படும் வருடாந்த உற்பத்தியானது ஒவ்வொரு வருடமும் 4500 அலகுகளாகும். வருடாந்த உற்பத்திகள் வருடம் 3 இல் 20% ஆல் அதிகரிக்குமெனவும் செயற்றிட்டம் முடிவுறும் வரை அதே மட்டத்தில் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. செயற்றிட்டக் காலப்பகுதியில் அலகொன்றிற்கான விற்பனை விலையானது ரூ. 6000 ஆக இருக்கும். வருடத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து அலகுகளும் அதே வருடத்தில் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) நேர் உற்பத்திக் கிரயமானது முதல் மூன்று வருடங்களில் அலகொன்றிற்கு ரூ. 3 000 ஆக இருக்கும். அதன் பின்னர், இது அலகொன்றிற்கு ரூ. 3 300 வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) செயற்றிட்டத்தின் பெறுமானத்தேய்வினை உள்ளடக்கிய வருடாந்த உற்பத்தி மேந்தலைகள் ரூ. 6 800 000 ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இயந்திரமானது நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படும்.

(iv) இந்த இயந்திரத்தை கம்பனியால் மூன்றாம் தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்ட கம்பனியின் கட்டடத்தில் இயக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கம்பனியானது ஒவ்வொரு வருடமும் ரூ. 1 000 000 வாடகை வருமானத்தை இழக்கும்.

(v) இச்செயற்றிட்டமானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

(vi) செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதம் 10%. இதன் கழிவீட்டுக் காரணிகள் பின்வருமாறு.

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக்காரணி (*கிட்டிய இரண்டு தசமதானங்களுக்கு*) | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆரம்ப மற்றும் வருடாந்தக் காசு உட்பாய்ச்சல்களும் காசு வெளிப்பாய்ச்சல்களும் (*ஒவ்வொரு காசுப்பாய்ச்சல் உருப்படியையும் தனித்தனியாகக் காட்டக்கூடியவாறு*)

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் செயற்றிட்டத்தில் முதலீடு செய்வதற்கான சிபார்சு

(4) செயற்றிட்டத்தின் கணக்கீட்டு வருவாய் வீதம் (சராசரி முதலீட்டின் அடிப்படையில்)

**(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**



[பக். 9 ஐப் பார்க்க

5. (அ) வியாபாரக் கம்பனியான தயாளன் PLC இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் விபரங்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| **31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கானது:** | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் | 6 400 |
| விற்பனைக் கிரயம் | 3 840 |
| ஏனைய வருமானம் | 80 |
| நிர்வாக, விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 990 |
| நிதிக் கிரயம் | 110 |
| வருமானவரிச் செலவு | 420 |
| **வருடத்திற்கான இலாபம்** | **1 120** |
| **31.03.2026 இலுள்ளவாறு:** | **ரூ.'000** |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 5 250 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 3 750 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **9 000** |
| சாதாரண பங்கு மூலதனம் | 2 800 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 2 200 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் - வங்கிக் கடன் | 1 500 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 1 750 |
| சென்மதி செலவுகள் | 750 |
| **மொத்தப் பொறுப்புக்களும் உரிமையாண்மையும்** | **9 000** |

**மேலதிக தகவல்கள்:**

31.03.2026 இலுள்ளவாறு வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 28000 ஆக இருந்ததுடன் இவ்வருடத்தில் செலுத்திய பங்கிலாபம் ரூ. 280 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் விகிதங்கள்:

(1) மொத்த இலாப விகிதம்
(2) தேறிய இலாப விகிதம்
(3) பங்கொன்றிற்கான உழைப்பு
(4) பங்கொன்றிற்கான பங்கிலாபம்
(5) உரிமையாண்மைக்கு கடன் விகிதம்
(6) நடைமுறை விகிதம்
(7) உரிமையாண்மை மீதான வருவாய் விகிதம்

**(10 புள்ளிகள்)**

(ஆ) வைத்தியர்களான ஜவாகர், கனிஸ்கர், சர்மிலன் ஆகிய மூவரும் பங்குடமையொன்றின் உரிமையாளர்களாவர். இப்பங்குடமையானது தனியார் வைத்தியசாலையொன்றை நடத்தி வருகின்றது. பங்குடமை உடன்படிக்கையின் நிபந்தனைகள் வருமாறு:

- ஜவாகர், கனிஸ்கர், சர்மிலன் ஆகியோருக்கிடையில் முறையே 3:2:1 என்றவாறு இலாபங்களும் நட்டங்களும் பகிரப்படுகின்றன.
- பங்காளர்கள் ஆரம்ப மூலதன மீதிகள் மீது வருடமொன்றுக்கு 10% வட்டியைப் பெறுவதற்கு உரித்துடையவராவர்.
- பங்காளர் ஒவ்வொருவரும் பங்குடமையின் முகாமைத்துவத்தில் ஈடுபடுவதற்காக வருடாந்தச் சம்பளமாக ரூ. 2 400 000 பெறுவதற்கு உரித்துடையவராவர்.
- இவ்வுடன்படிக்கையில் உள்ளடக்கப்படாத விடயங்களுக்கு 1890 பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும்.

[பக். 10 ஐப் பார்க்க

பயிற்சிக் கணக்கீட்டு உதவியாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட 31.03.2026 இல் உள்ளவாறான பங்குடமையின் பரீட்சைமீதி பின்வருமாறு:

| | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| 01.04.2025 இல் மூலதனக் கணக்குகள்: | | |
| ஜவாகர் | | 7 000 |
| கனிஸ்கர் | | 5 000 |
| சர்மிலன் | | 4 000 |
| 01.04.2025 இல் நடைமுறைக் கணக்குகள்: | | |
| ஜவாகர் | | 1 000 |
| கனிஸ்கர் | | 400 |
| சர்மிலன் | 200 | |
| 01.04.2025 இல் ஜவாகரால் வழங்கப்பட்ட கடன் | | 2 000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 24 000 | |
| அலுவலக உபகரணங்கள் | 500 | |
| வைத்தியசாலைச் சேவைகளிலிருந்து வருவாய் | | 45 000 |
| ஏனைய வருமானம் | | 1 200 |
| வைத்தியசாலைச் சேவைகள் வழங்கல் கிரயம் | 15 000 | |
| நிர்வாகச் செலவுகள் | 16 400 | |
| சந்தைப்படுத்தல் செலவுகள் | 4 500 | |
| செலுத்திய வருமான வரி | 100 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 3 100 |
| 31.03.2026 இல் இருப்பு - கிரயத்தில் | 6 200 | |
| வியாபார வருமதிகள் | 2 300 | |
| தொங்கல் கணக்கு | | 500 |
| | **69 200** | **69 200** |

**மேலதிக தகவல்கள்:**

(i) நடைமுறை வருடத்தில் ஒவ்வொரு பங்காளருக்கும் ரூ. 2 000 000 சம்பளம் காசாகச் செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகையானது தவறுதலாக நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ii) வைத்தியசாலைச் சேவைகளின் வழங்கல் கிரயத்தைக் கணிப்பீடு செய்வதில் கருத்திற்கொள்ளப்பட்ட இறுதியிருப்புக் கிரயம் ரூ. 6 200 000 ஆனது களஞ்சியப் பேரேட்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. ஜவாகரால் அவரது தனிப்பட்ட பாவனைக்கு வணிகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 1 200 000 கிரய உருப்படிகள் களஞ்சியசாலைப் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. எனினும், பௌதீக இருப்பின் அடிப்படையில் கணிக்கப்பட்ட 31.03.2026 இல் உள்ளவாறான இறுதியிருப்பின் கிரயம் ரூ. 5 000 000 ஆக இருந்தது.

(iii) இவ்வைத்தியசாலை விடுதியில் ஒரு மாத காலப்பகுதிக்கு அனுமதிக்கப்பட்ட கனிஸ்கரின் குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ. 400 000 ஆகும். இக் கட்டணத்தைத் தீர்ப்பதற்கு ரூ. 300 000 ஐச் செலுத்த கனிஸ்கர் இணங்கினார். மீதித் தொகையானது ஏனைய பங்காளர்களின் சம்மதத்துடன் நோயாளிக்குக் கொடுக்கப்பட்ட கழிவாகக் கருதப்பட்டது. எனினும், இக்கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை. பங்குடமையானது வாடிக்கையாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கழிவுகளைச் சந்தைப்படுத்தல் செலவாகக் கருதுகின்றது.

(iv) 2026 மார்ச் மாதத்தில் கனிஸ்கரால் சோதிக்கப்பட்ட நோயாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூ. 200 000 ஆனது தவறுதலாகப் பங்குடமையின் ஏனைய வருமானமாகப் பதியப்பட்டிருந்தது. ஏனைய பங்காளர்களால் இணங்கப்பட்டவாறு இத்தொகையின் 75% ஆனது கனிஸ்கரின் தனிப்பட்ட வருமானமாகவும் மீதி 25% பங்குடமையின் வருமானமாகவும் கருதப்படல் வேண்டும்.

(v) பரீட்சைமீதியில் காணப்படும் வருமான வரிக் கொடுப்பனவு ரூ. 100 000 ஆனது பங்குடமையால் செலுத்தப்பட்ட சர்மிலனின் தனிப்பட்ட வருமான வரியைப் பிரதிபலிக்கின்றது.

(vi) பரீட்சைமீதியில் காட்டப்பட்டுள்ள அலுவலக உபகரணங்கள் ஜவாகரின் தனிப்பட்ட நிதியிலிருந்து 01.04.2025 இல் வணிகத்துக்காகக் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இவ்வுபகரணங்களின் கிரயமானது அலுவலக உபகரணக் கணக்கில் வரவிலும், தொங்கல் கணக்கில் செலவிலும் பதியப்பட்டுள்ளது. இவ்வுபகரணங்களின் நடைமுறை வருடத்துக்கான பெறுமானத் தேய்வு ரூ. 50 000 ஆகும். இது இன்னமும் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. பங்குடமையானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான பெறுமானத்தேய்வை நிர்வாகச் செலவாகக் கருதுகின்றது.

[பக். 11 ஐப் பார்க்க

Past Papers Wiki



(vii) 31.03.2026 இல் சர்மிலன் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ.3 000 000 ஆக மதிப்பிடப்பட்டது. அதன் பின்னர், ஜவாகரும் கனிஸ்கரும் இலாபங்களையும் நட்டங்களையும் முறையே 3:2 என்றவாறு பகிர்ந்துக்கொண்டு பங்குடமையைத் தொடர இணங்கினர். மேலும் இத்திகதியில் சர்மிலன் பங்குடமையிலிருந்து தனக்கு வர வேண்டிய மொத்தத் தொகையை பங்குடமை வணிகத்துக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கடனாகக் கொள்வதற்கு இணங்கினார்.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)

(2) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள்

(3) 31.03.2026 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

**(30 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

6. **(அ)** அமலி PLC இன் நிதிநிலைமைக்கூற்றுகளிலிருந்து பின்வரும் தகவல்களை பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | 31.03.2026 இல் (ரூ.'000) | 31.03.2025 இல் (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 30 500 | 26 800 |
| இருப்பு | 2 500 | 3 500 |
| வியாபார வருமதிகள் | 12 500 | 11 250 |
| முன்செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் | 1 500 | 1 000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 2 000 | 600 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **49 000** | **43 150** |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 25 000 | 17 500 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 15 000 | 12 000 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 7 500 | 11 750 |
| செலுத்த வேண்டிய வருமானவரி | 800 | 1 400 |
| செலுத்த வேண்டிய செயற்பாட்டுச் செலவுகள் | 700 | 500 |
| **மொத்தப் பொறுப்புக்களும் உரிமையாண்மையும்** | **49 000** | **43 150** |

**மேலதிக தகவல்கள்:**

(i) கம்பனியின் அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) 31.03.2026 முடிவடைந்த வருடத்திற்கான மொத்த விற்பனைகள் ரூ. 43 500 000 ஆகும்.

(iii) 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தச் செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் வருமானவரிச் செலவு முறையே ரூ. 9 250 000, ரூ. 1 500 000 ஆகும். செயற்பாட்டுச் செலவுகளானவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நடைமுறை வருடத்திற்கான ரூ. 3 500 000 பெறுமானத் தேய்வையும் உள்ளடக்குகின்றது. மேலும் முதற்தடவையாக 31.03.2026 இல் மேற்கொள்ளப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான மீள்மதிப்பின் விளைவாக ஏற்பட்ட குறை ரூ. 3 000 000 ஆக இருந்ததுடன் இதுவும் செயற்பாட்டுச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(iv) ரூ. 1 750 000 கொண்டுசெல் தொகையுடைய அலுவலக உபகரணமானது ரூ. 2 600 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த அலுவலக உபகரண விற்பனையால் ஏற்பட்ட ஆதாயமானது ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இந்த உருப்படி மட்டுமே கம்பனியின் நடைமுறை வருடத்திற்கான ஏனைய வருமானத்திலுள்ள ஒரேயொரு உருப்படி ஆகும். மேலும், கம்பனியானது நடைமுறை வருடத்தில் மோட்டார் வாகனமொன்றைக் காசுக்குக் கொள்வனவு செய்தது.

(v) கம்பனியானது நடைமுறை வருடத்தில் ரூ. 2 500 000 நிறுத்திவைத்த வருவாய்களை மூலதனமாக்கியுள்ளது. மேலும், கம்பனியானது நடைமுறை வருடத்தில் பொதுப் பங்கு வழங்கலையும் மேற்கொண்டுள்ளதுடன் இப்பங்கு வழங்கலின் மொத்த தொகைக்கான பணம் சேகரிக்கப்பட்டுள்ளது.

(vi) கம்பனியானது 01.01.2026 இல் இடைக்காலப் பங்கிலாபமாக ரூ. 2 000 000 ஐச் செலுத்தியுள்ளது.

(vii) கம்பனியின் 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த இலாப விகிதம் 40% ஆகும்.

**வேண்டப்படுவது:**

'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2026 இல் முடிவடைந்த வருடத்திற்கான அமலி PLC இன் பின்வருவன:

(1) காசுப்பாய்ச்சல் கூற்று (*செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப்பாய்ச்சல்களைக் காட்டுவதற்கு* ***நேரில் முறையினைப்*** *பயன்படுத்துக*).

(2) ***நேர்முறையினைப்*** பயன்படுத்திச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்

**(20 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

அ.பொ.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ஆ) யாழ்ப்பாணத்திலுள்ள சமூக நிலையமொன்று தனது 75 ஆவது வருடத்தினை ஜனவரி 2027 இல் கொண்டாடத் திட்டமிடுகிறது. இச்சமூக நிலையத்தின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 150 ஆகும். சமூக நிலையமானது இந்த ஆண்டு விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு விளையாட்டு நிகழ்ச்சியொன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

(i) விளையாட்டு நிகழ்ச்சிக்கான மதிப்பிடப்பட்ட கிரயங்கள்:

| | ரூ. |
|---|---|
| விசேட விருந்தினர்கள் 8 பேருக்கான மாலைகள்: மாலையொன்று | 1 500 |
| விசேட விருந்தினர்கள் 8 பேருக்கான உபசரிப்புச் செலவுகள்: விருந்தினர் ஒருவருக்கு | 1 000 |
| கதிரைகளுக்கான வாடகைக்கிரயம்: கதிரையொன்று | 600 |
| விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கான பரிசுகள் | 50 000 |
| ஒலிபெருக்கி வாடகைக் கிரயம் | 44 000 |
| நினைவுக் கையேடு ஒன்றிற்கான கிரயம் | 2 000 |
| அங்கத்தவர் ஒருவருக்கான உணவுப் பொதிக் கிரயம் | 850 |
| அங்கத்தவர் ஒருவருக்கான தண்ணீர்ப் போத்தல் கிரயம் | 150 |

(ii) ஒவ்வொரு விசேட விருந்தினருக்கும் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றும் அனைத்து அங்கத்தவர்களிற்கும் நினைவுக் கையேடு ஒன்று வீதம் வழங்கப்படும்.

(iii) இந்நிகழ்ச்சிக்கு 160 கதிரைகளை வாடகைக்குப் பெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(iv) விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றும் ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் ரூ. 5000 கட்டணம் அறவிடுவதென எதிர்பார்க்கப்படுகிறது.

**வேண்டப்படுவது:**

(1) விளையாட்டு நிகழ்ச்சிக்கான மொத்த நிலையான கிரயம்

(2) அங்கத்தவர் ஒருவருக்கான மாறும் கிரயம்

(3) அங்கத்தவர் ஒருவருக்கான பங்களிப்பு

(4) விளையாட்டு நிகழ்ச்சிகளின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்குப் பங்குபற்ற வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை

(5) விளையாட்டு நிகழ்ச்சியிலிருந்து ரூ. 50000 மிகையொன்று எதிர்பார்க்கப்படுமாயின், விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்ற வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை

(6) விளையாட்டு நிகழ்ச்சியில் 100 அங்கத்தவர்கள் பங்கு பற்றுவார்களாயின், மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் அறவிடவேண்டிய கட்டணம்

(7) விளையாட்டு நிகழ்ச்சியில் அனைத்து 150 அங்கத்தவர்களும் பங்குபற்றும் அதேவேளை ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் ரூ. 5 500 வீதம் அறவிடப்படுமாயின் எதிர்பார்க்கப்படும் மிகை

(8) விளையாட்டு நிகழ்ச்சியில் 100 அங்கத்தவர்கள் பங்குபற்றுவதுடன் நினைவுக் கையேட்டின் கிரயத்தினை ரூ. 1 750 இற்குக் குறைக்கக் கூடியதாகவும் இருப்பின் மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் அறவிடவேண்டிய கட்டணம்

**(20 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

※ ※ ※

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library
0001254
Past Papers Wiki